Registered as a Newspaper in Ceylon விலைசதம் 10

# ஈழநாடு
THE EELA NADU

தேசியதினசரி National Tamil Daily
மலர் 8 (9-8-66) இதழ் 180
பராபவ ஆடி 24 ரபி: ஆகிர் 21 செவ்வாய்க்கிழமை

மின்னும் வைரங்களுக்கும்
தங்கப்பவுண் நகைகளுக்கும்
AKS
போன் 519
நகை மாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.


**பிற்பகல் விசேஷபதிப்பு**

பிரதமர் டட்லி சேனநாயகாவும் மற்றும் அமைச்சர்கள் சிலரும் இன்று முற்பகல் யாழ்ப்பாணம் வருகின்றனர். இந்த நிகழ்ச்சிகள் பற்றிய செய்திகளை இன்று பிற்பகலே நீங்கள் தெரிந்துகொள்ளலாம்.

ஈழநாடு
(9-8-66) பிற்பகல்
விசேஷ பதிப்பு

ஏஜன்டுகள் இன்று முற்பகலுக்குள் தங்களுக்குத் தேவையான பிரதிகளைப் பதிவுசெய்துகொள்ளவேண்டும்.

# நட்புறவுசிற்பியே வருக வரவு நல்வரவாகுக!



குணத்தின் குன்றே, வருக!
குலத்தின் விளக்கே வருக!!

ஈழ வள நாட்டின் தோழா, வருக!
சூழ வரும் ஏனை அமைச்சரும், வருக!!

சமுதாய நட்பையீன்ற செம்மலே, வருக!
எமதார்வம் பூர்த்திசெய்யும் ஏந்தலே, வருக!!

சேவை செய்தே இன்பம் காணும் சேவகா வருக!
ஆவல் மீற டட்லி சேன நாயகா, வருக!!

## விழாக்கோலம் பூண்டிருக்கும் யாழ் நகரில் மகத்தான வரவேற்பு

யாழ்ப்பாணம், செவ்வாய்

தேசீய அரசாங்கத்தின் பிரதமரும், இந்நாட்டின் தலைவரும், சீர்குலைந்திருந்த தேசீய ஐக்கியத்தை மீண்டும் உருவாக்கியவரும் சமுதாயநட்புறவுச் சிற்பியுமான கௌரவ திரு. டட்லி சேனநாயகா இன்று முதல் தடவையாக யாழ்ப்பாணம்வருகிறார். பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவுக்கு யாழ்ப்பாண நகரில் இன்று மகத்தான வரவேற்புகள் அளிக்கப்படும்.

## மந்திரிகள், எம்.பிக்கள் பவனியாக வருவர்

யாழ்ப்பாணம், செவ்.

தேசிய அரசாங்கத்தைச் சேர்ந்த ஆறு மந்திரிகளும் எம். பி, க்களும் இன்று காலை ஏழு மணிக்கு பலாலி விமான நிலையத்தை வந்தடைவர். தமிழ்காங்கிரஸ் பிரமுகர்கள் அவர்களை வரவேற்று யாழ்ப்பாணத்துக்கு மோட்டார்பவனி ஊர்வலமாக அழைத்து வருவார்கள்,

சமூகசேவை மந்திரி திரு. அசோக கருணரத்தின கொழும்பிலிருந்து காரில் வருவார்.

ஏற்கனவே மற்றும் சில செனட்டர்களும், அரசாங்க தரப்பு எம். பி. க்களும் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்துவிட்டனர். தென் பகுதியிலிருந்து நூற்றுக் கணக்கான சிங்களமக்கள் பிரதமருக்கு அளிக்கப்படும் வரவேற்பை நேரில் காண்பதற்கு விசேஷ பஸ்வண்டிகள்மூலம் யாழ்ப்பாணம் வந்தபடியிருக்கின்றனர். இவர்கள் நாகவிகாரையில் நடைபெறும் வரவேற்பு வைபவங்களில் கலந்துகொள்வர்.

(14-ம் பக்கம் பார்க்க)

## பகல் 11மணிக்கு ரயில் நிலையத்தில்

யாழ்ப்பாணம், செவ்.

இன்று முற்பகல் 11 மணியளவில் விசேஷ ரயிலில் யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் வந்திறங்கும் பிரதமர் திரு. டட்லி சேனநாயகாவுக்கு உற்சாகமான வரவேற்பளிக்க ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. ரயிலிலிருந்து பிரதமர் இறங்கியதும் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேலணன் அபயசேகரா பிரதமரை எதிர்கொண்டு வரவேற்பார். ரயில் நிலைய வரவேற்பில் தமிழரசுக்கட்சித் தலைவர்கள், எம். பி.க்கள் செனட்டரும் தமிழ்க்காங்கிரஸ் தலைவர்களும் பிரதிநிதிகளும் மற்றும் அரசாங்க அதிகாரிகள் நகரப் பிரமுகர்கள், உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் ஆகியோரும் கலந்துகொள்வர்.

இன, மத, கட்சி வேறுபாடெதுவுமின்றி ரயில் நிலையத்தில் அளிக்கப்படும் உத்தியோக ரீதியான வரவேற்பில் கலந்துகொள்ளுமாறு எம். பி.க்களை, செனட்டர்

(13-ம் பக்கம்பார்க்க)

## வரவேற்பு ஏற்பாடு விபரங்கள்

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திலிருந்துபிரதமர் டட்லி சேனநாயக்காவும், மந்திரிகளும், உதவி மந்திரிகளும், எம். பி. க்களும் காலை 11-15 மணிக்கு ஊர்வலமாக அழைத்துச்செல்லப்படுவார்கள், சந்திகள் தோறும் வரவேற்பு அளிக்கப்படும் விபரங்கள் வருமாறு:

11-20 புகையிரத நிலைய வீதி - ஆஸ்பத்திரி வீதி சந்தி, 11-25 வேம்படிவீதி புகையிரத வீதிசந்தி, மார்ட்டின் வீதி-பிரதான வீதிச் சந்தி, 11-30 பாம் கோட், 12-00 பாம் கோட்டிலிருந்து புறப்படுதல், 12-15 நல்லூர் கந்தசுவாமி கோவில், 12-35 அரசடி சந்தி, 12-40 கந்தர் மடம் சந்தி. 12-45 பலாலி வீதி, நாவலர் வீதி 12-50 ஆனைப்பந்திச்சந்தி, 12-55 பருத்தித் துறை வீதி, பலாலி வீதிச் சந்தி.

1 00 நாகவிகாரை, 1-18 ஆஸ்பத்திரிச் சந்தி, 1-21 வேம்படி மகளிர் கல்

(14-ம் பக்கம் பார்க்க)

## தொழிலாளர்வாழ்வில் ஒளி வீசுகிறது
### தேசியதொழிற்சங்கசம்மேளனத்தில் தலைவர் ஜி. ஜி. பெருமிதம்

—நமது நிருபர் ஈ. கே. ராஜகோபால்—

யாழ்ப்பாணம், செவ்வாய்

'இந்த நாட்டில் தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பிறகுதான் தொழிலாளர்கள் பயமில்லாமல் மூச்சு விட முடிகிறது. அவர்கள் வாழ்வில் ஓரளவாவது ஒளி பிறந்திருக்கிறது" என்று யாழ்ப்பாணம் எம். பி.யும் தமிழ்க்காங்கிரஸ் தலைவருமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கூறினார்.

(14-ம் பக்கம் பார்க்க)

## 'ஈழநாடு' பிரதமர்விஜய அனுபந்தம்

'ஈழநாடு' இன்றையஇதழ் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வதையொட்டி 14 பக்கங்களுடன் ஓர் அனுபந்தமாக வெளிவந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

தேசவுவேலையில் அனுபவமுள்ள பெண்களும் போதனாசிரியையும் தேவை. 217/1 கடையிற்சுவாமி கோயில் ஒழுங்கை, நீராவியடி யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் தொடர்புகொள்ளவும். 834

## வைத்தியம்

தோய்வு, கசம், நீரிழிவு, இந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர், கைலாச பிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## காணவில்லை

பைல்:

28-7-1966-ல் எனது நியமனக் கடிதம் பட்டைப் பெறுபேறு சம்பந்தமான கடிதங்கள் கொண்ட பைல் (File) யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் தவறிப்போய் விட்டது. கண்டெடுத்தவர்கள் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைப்பின் தகுந்த சன்மானமளிக்கப்படும். நன்றியுள்ள த. சிவசம்பு, காணிப்பதிவகம், யாழ்ப்பாணம். 833

## கல்வி

**வகுப்புகள்**

மாணவ ஆசிரியர்; பொதுச் சௌக்கிய பயில்வோர் ஆகிய வகுப்புக்களுக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. உடன் சேருங்கள். யாழ்ப்பாண டியூட்டோறியல் கல்லூரி, கைலாச பிள்ளையார் கோயிலடி, நல்லூர்-யாழ்ப்பாணம். 823

**வகுப்புகள்**

ஜி. ஸி. ஈ. சாதாரணம் கலை / விஞ்ஞானம் / வர்த்தகம் முதலிய வகுப்புகளுக்கு இன்னும் சில வெற்றிடங்களே உள்ளன. விடுதி வசதியும் உண்டு. ஐக்கியகலாசாலை, நெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 825

**பிரவேசங்கள்**

ஆங்கிலம் / தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்து, கணக்குப் பதிவியல் வகுப்புகளுக்கு இப்பொழுது பிரவேசங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. பெண்களுக்குத் தனி விடுதி வசதி உண்டு. ஐக்கியகலாசாலை, நெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 826

## விற்பனைக்கு

**காணி**

யாழ்ப்பாணம் அரசடிவீதியில் இந்துமகளிர் கல்லூரிக்கும் கந்தர்மடம் சந்திக்குமிடையில் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்கு இருக்கிறது. விபரங்களுக்கு: 330, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். 831

**காணி:**

சாவகச்சேரி, மறவன்புலவு தண்டிகைப்பள்ளம் வயல் பரப்பு 31. விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு:-

திருமதி த. முருகேசபிள்ளை, ஆசிரியர், புலோலி தெற்கு, பருத்தித்துறையில் விசாரிக்கவும். 832


**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 3-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
**LONGEST DAY**

**மகாத்மா தியேட்டர்**
(கரவெட்டி)
எஸ். எஸ் ஆர்.
விஜயகுமாரி
முதலியோர் நடித்த
"பூமாலை"

**நியூ நாலிங்கன்**
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எம்.ஜி.ஆர் - சரோஜாதேவி
நடித்த
**பணத்தோட்டம்**

**REGAL—JAFFNA**
NOW SHOWING
Cliff Robrtson
in
633 SQUADRON
(War Film) (Cinemascope- Color)


## 'ஆயுள்வேதமே சிறந்த முறை'

உடுப்பிட்டி, திங்கள்

'பண்டைய காலத்தில் முனிவர்களினாலும், அரசர்களினாலும் சித்த ஆயுர்வேத வைத்திய முறை பேணிப் பாதுகாக்கப்பட்டுவந்தது. இவ்வைத்தியமுறை ஆங்கில சிகிச்சையைவிட முதல்தரமானது. சித்த வைத்திய முறைப்படி சத்திரச்சிகிச்சை கூடச்செய்யமுடியும் என்று அகஸ்தியர் சொல்லியுள்ளார். இதனை நாம் பாதுகாக்கவேண்டும்.'

நாளுட்டான் மேற்கு இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலையில் வைத்தியராகக் கடமையாற்றி நயினாதீவு கிராமசபை வைத்தியசாலைக்கு மாற்றலாகிச் செல்லும் திரு. க. தசோமசேகரத்தின் சேவையைப் பாராட்டி நாளுட்டான் அரசாங்க ஊழியர் அளித்த பிரிவுபசாரக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் காரியதரிசி திரு. இ. யோகநாதன் மேற்கண்டவாறு கூறினார். அரசாங்க ஊழியர்களால் பாராட்டுப் பத்திரம் ஒன்றும் வழங்கப்பட்டது.

திரு க. த. சோமசேகரம் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

## யூகோவை பின்பற்ற சிறிமா விரும்புகிறார்

கொழும்பு, செவ்வாய்

யூகோஸ்லேவியாவிலுள்ள தொழிலாளர் கவுன்ஸில்கள் போல் இங்கும் தொழிலாளர் கவுன்ஸில்களை நிறுவ நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென்று திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தெரிவித்திருக்கிறார். யூகோஸ்லேவியாவில் கைக்கொள்ளப்படும் சோஷலிஸமே எமது இலட்சியமாக இருக்கவேண்டுமென்று திருமதி சிறிமா தனது கட்சியினருக்குக் கூறியுள்ளாராம்.

திருமதி சிறிமா நீண்டநாள் யூகோஸ்லேவியாவில் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டுக்கடந்த புதன்கிழமை தான் நாடு திரும்பியிருந்தார்.

## கலைஞருக்கு இறுதிமரியாதை

சுழிபுரம், திங்கள்

காலஞ்சென்ற கலைஞரும் முன்னாள் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் விரிவுரையாளருமான திரு. பி. எம். வேதநாயகத்தின் இறுதிச் சடங்கில் ஆசிரியர்கள், கலைஞர்கள் மற்றும் பிரமுகர் உட்பட பலர் கலந்து தமது இறுதிமரியாதையைச் செலுத்தினர்கள்.

## சதிவழக்கில் வழக்கறிஞர் புகார்

கொழும்பு, செவ்வாய்

புரட்சிச் சதிவழக்கில் 4வது எதிரியான மேஜர் ஜெனரல் ரிச்சார்ட் உடுகமவின் வழக்கறிஞரான திரு. திஸ்ஸ விஜயரத்தின நேற்று முன்தினம் கொழும்பு பிரதானநீதவான் திரு பி ஜி. எஸ். டேவிட் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது தமது வாடிக்கையாளருக்கு எதிரான முதல் தகவலைத் தரப் பொலிஸார் மறுத்துள்ளதாகக் கூறினார்.

''பொலிஸார் முதலாவது புகாரை ஓர் கேலியாகக் கருதினாலொழிய மற்றும்படி அதை எழுத்தில் எடுத்துப் பிரதிவாதிகள் சார்பில் தோன்றும் வழக்கறிஞர்களிடம் தரவேண்டும்'' எனத் திரு. விஜயரத்தின நீதவானிடம் கூறினார்.

இப்படிப்பட்ட அனுபவம் இதுதான் தமக்கு முதற்தடவையாக ஏற்பட்டுள்ளதென்றும், நீதியின் பெயரில் நீதவான் அத்தகவலைக் கொடுக்கும்படி பொலிஸாருக்கு அறிவிக்கவேண்டும் என்றும் திரு. விஜயரத்தின கேட்டுக்கொண்டார்.

வழக்கின் அடுத்த தவணையில் இவ்விஷயம் பற்றிக் குறிப்பிடும்படியும், அதற்கிடையில் தாம் விஷயத்தை ஆராய்வதாகவும் நீதவான் கூறினார்.

## கூட்டாட்சிகட்சிகளின் ஹர்த்தால் விழா

கொழும்பு, செவ்வாய்

நாடு முழுவதும் இவ்வாரம் ஹர்த்தால் ஞாபகார்த்தக் கொண்டாடடங்களுக்கான ஒழுங்குகளைக் கூட்டாட்சி அரசியல் கட்சிகள் ஏற்பாடுசெய்துள்ளன.

நிதிமந்திரியின் புதிய வரவு-செலவுத் திட்டத்தைக் கண்டிப்பதும் அதற்கு எதிர்ப்பைச் சேகரிப்பதுமே இக்கூட்டங்களின் முக்கிய நோக்கமாகும்.

ஆகஸ்ட் 13ல் அநுராதபுரம், கண்டி, யாழ்ப்பாணம், காலி, அம்பாறை, குருணகலை, பதுளை, திருக்கோணமலை மற்றும் பல இடங்களில் கூட்டங்கள் நடைபெறும்.

## தகராறு காரணமாக தற்கொலை முயற்சி

உடுப்பிட்டி, செவ்.

கழுத்தில் துவாயினால் இறுகச் சுற்றித் தற்கொலை செய்ய முயற்சித்ததாகக் கூறப்படும் 15 வயதுச் சிறுவனொருவன் பருத்தித்துறை மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றுவருகின்றான். பெற்றோருடன் ஏற்பட்ட தகராறு காரணமாகவே தான் இம்முயற்சியிலீடுபட்டதாக டாக்டர்களிடம் இச்சிறுவன் கூறினான். சிறுவன் குணமடைந்துவருவதாகக் கூறப்படுகிறது.

## தேவை

இலங்கை தேசிய க்ஷயரோக நிவாரண சங்கத்தின் (C N. A. P. T) கிளை நிறுவனங்களின் அமைப்பாளராக சாவகச்சேரி - பளைப் பகுதியிலும் வலிகாமம் கிழக்குப் பகுதியிலும் கடமையாற்றுவதற்குப் பின்வருந் தகைமை வாய்ந்தோர் மனுபபண்ணும்படி அழைக்கப்படுகின்றனர்.

(அ) 25—45 வயதுக்கிடைப்பட்ட ஆண்கள்.
(ஆ) சனசமூக சேவையில் அனுபவம் வாய்ந்தவர்.
(இ) ஒரு நல்ல கல்வித் தராதரம் உடையவர், (கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (உயர் தரம்) உடையவர்களுக்குக் கூடிய மதிப்பு வழங்கப்படும்.)
(ஈ) ஆங்கிலத்திலும் தமிழிலும் போதிய தேர்ச்சி அடைந்தவர்.

விண்ணப்பப்பத்திரங்களைப் பின்வருவோருக்கு அனுப்புக. மேலதிக விடயங்களை அறிய விரும்பினும் இவர்களிடம் பெற்றுக்கொள்க:

(i) திரு. ஆர். சிதம்பரப்பிள்ளை, கௌரவ காரியதரிசி, சாவகச்சேரிக்கிளை, காரியாதிகாரி அலுவலகம், சாவகச்சேரி
(ii) திரு. கே. இராசசிங்கம். கௌரவ காரியதரிசி வலிகாமம் கிழக்குக் கிளை, சுகாதார அலுவலகம் கோப்பாய்.

விண்ணப்பங்கள் இம்மாதம் 22-ம் திகதி 12 மணிக்கு முன்னதாக அனுப்பப்படல்வேண்டும். இவ்வேளைக்கு முன்னர் விண்ணப்பஞ் செய்திருப்போர் மீண்டும் விண்ணப்பங்கள் அனுப்பவேண்டியதில்லை.

எச். ஈ ஆர் குணவர்த்தன,
நிர்வாகக் காரியதரிசி.

51, எடின்பரோ கிரேசண்டு.
கொழும்பு-7, 6-8-1966, 912


**11-ந் திகதி வியாழன் முதல்**

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)

மற்றும் சினிமாஸ் திரைகளில்

**சிவாஜி, எஸ். எஸ். ஆர்,**
**எம். ஆர். ராதா, பாலையா, முத்துராமன்,**
**நாகேஷ், தேவிகா, புஷ்பலதா**
நடித்த
பாரதமாதா பிக்ஸர்ஸ்

**பழநி**

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
என். டி. ராமராவ்-அஞ்சலிதேவி
நடித்த
**லவகுச**

**எதிர்பாருங்கள் !!**
யாழ். நகரமண்டபத்தில்
15—8—66 முதல் 19—8—66 வரை
தினசரி பி. ப. 6—30 மணிக்கும் 9—30 மணிக்கும்



— தேவ் & தேவ் அளிக்கும் —

**பாச நிலா**

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்பட்ட
முதல் முழுநீள 16 மி. மீட்டர் தமிழ்ப் படம்
(பாதி கலரில் -காந்தஒலி)
(Processed in Germany — Sound Stripped in Canada)

நடிகர்கள்:
செல்வராஜன் – ரஞ்சி செல்வராஜன்
மனோகரன், ஜெயந்திரா
ஐடா தேவேந்திரன்
முதலியோர்

டிக்கட்: 6-30 மணிக் காட்சிக்கு ரூபா 5, 3, 2.
9-30 மணிக் காட்சிக்கு ரூபா 3, 1,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7 அமெரிக்க விமானங்கள் ஒரே நாளில் வீழ்த்தப்பட்டன

## வட வியட்னும் உயரே சம்பவம்

சைகோன், ஆகஸ்ட் 8

வடவியட்னுமுக்கு உயரே கடந்த 24 மணி நேரத்தில் 7 அமெரிக்க விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டன. யுத்தம் ஆரம்பமானது முதல் இதுவரை ஒரேநாளில் இத்தனை விமானங்களை அமெரிக்கா இழந்ததில்லை எனக் கூறப்பட்டது.

இரு விமானிகள் மட்டுமே மீட்கப்பட்டார்கள் என்றும் மற்றவர்களைக் காணவில்லை என்றும் அமெரிக்க வட்டாரங்கள் அறிவித்தன. வடவியட்னும் மீது குண்டு வீச்சு ஆரம்பமானது முதல் இதுவரை 326 விமானங்களை தாங்கள் இழந்திருப்பதாயும் அவை மேலும் கூறின. ஆனல் இதுவரை 1000க்கு மேலான விமானங்களை தாங்கள் சுட்டுவீழ்த்தியதாய் வடவியட்னும் கூறுகிறது.

தென்வியட்னுமில் அமெரிக்கப் படைகள் அதிகரிக்கப்பட்டது குறித்து வட வியட்னும் சர்வதேச கட்டுப்பாட்டுக் கமிஷனுக்கு ஆட்சேபனை தெரிவித்திருக்கிறது.

இதற்கிடையில் வியட்னும் சம்பந்தமான ஆசிய மகாநாடு ஒன்றைக் கூட்ட வேண்டுமென்ற தாய்லந்தின் யோசனை அமெரிக்க முயற்சியின் பிரதிபலிப்பு எனக் கூறி சீன அதை நிராகரித்துள்ளதாய் தெரிகிறது. அமெரிக்கா வியட்னுமில் இருந்து வெளியேறவேண்டும் என்றும், ஏனெனில் வியட்னுமைவிட ஐரோப்பாவே அமெரிக்காவுக்கு மிகவும் முக்கியமானது என்றும் முன்னுள் மேற்கு ஜெர்மன்பிரதமர் அடினேர் கூறியிருக்கிருர்.

## சிக்காகோ இனக் கலவரம்

சிக்காகோ ஆக. 8

சிக்காகோவில் 1500 பேர் கொண்ட நீக்ரோ சிவில் உரிமை ஊர்வலத்தின் மீது வெள்ளையர்கள் போத்தல்களையும், கற்களையும் எறிந்தார்கள் 1000 பொலிசார் அமைதியை நிலைநாட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். நேற்றைய சம்பவத்தில் ஒரு பொலிஸ்காரர் காயமடைந்தார். பலர் கைது செய்யப்பட்டனர்.

## பஹாமாஸில் தேன்மதி

வாஷிங்டன், ஆக. 8

புதிதாக மணமுடித்த அமெரிக்க ஜனதிபதி ஜோன்ஸனின் புதல்வி லூஸியும் அவரது கணவர் நூஜண்டும் தேன்மதியைக் கழிப்பதற்காக பஹாமாஸ் வந்து சேர்ந்தனர்.

## 10 தினங்களில் மலேஸிய எதிர்ப்பு முடியும்!

### மாலிக் அறிவிப்பு

ஜாகார்த்தா, ஆக. 8

இன்னும் 11 தினங்களில் மலேஸிய எதிர்ப்பு கொள்கைமுடிவடையும் என இந்தோனேஷிய வெளிநாட்டு மந்திரி மாலிக் கூறினர்.

இதன்பின் மலேஸியாவிலுள்ள 1000 இந்தோனேஷியக்கைதிகள் நாடுதிரும்புவார்கள் என்றும் அவர் கூறினர்.

வெளிநாடுகளிலுள்ள இந்தோனேஷிய தூதர்கள் விசாரிக்கப்படவிருக்கிருர்கள் என்றும், இதுசம்பந்தமாக ஒரு தூதுகோஷ்டி பல நாடுகளுக்குச் செல்லும் என்றும் அவர் கூறினர்.

ஏற்கனவே அமெரிக்கா, தாய்லந்து, மேற்கு ஜெர்மனி, எகிப்து ஆகியநாடுகளுக்கு விசாரணை கோஷ்டி சென்றிருக்கிறது.

## சுகர்னே சம்மதம்

ஜாகர்த்தா, ஆக. 8

இந்தோனேஷிய மந்திரி சபையில் திருத்தம்செய்ய இன்னும் இடம் இருக்கிறது என ஜெனரல் சுஹர்தோவும், 4 உப ஜனதிபதிகளும் அறிவித்திருக்கிருர்கள்.

இதற்கிடையில் மலேஸிய எதிர்ப்புக் கொள்கையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்ற மந்திரி சபையின் முடிவுக்கு ஜனதிபதி சுகர்னே சம்மதம் தெரிவித்து விட்டதாய்க் கூறப்படுகிறது.

## கிணற்றில் விழுந்த யானைக்குட்டி!

### மிருகக்காட்சிசாலைக்கு அனுப்பப்பட்டது

வவனியா. ஞாயிறு

ஓமந்தைக்கருகில் மகிளங்குளம் என்னுமிடத்திலுள்ள ஒரு கிணற்றில் தவறி விழுந்த குட்டியானை ஒன்று இப்பொழுது தெஹிவளையிலுள்ள மிருகக்காட்சிசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் இரு தினங்களுக்கு முன்னர் நிகழ்ந்தது.

காட்டிலிருந்து வழி தவறி வந்துகிணற்றுக்குள் விழுந்த இந்த குட்டி யானையின் பரிதாபநிலையைக்கண்ட கிராமவாசிகள் காரியாதிகாரிக்கு அறிவித்ததைத் தொடர்ந்து அவர் வவனியா அரசாங்க அதிபர் திரு. ஆர். எம். பி. தஸநாயக்காவுக்கு அறிவித்தார். இதனைத் தொடர்ந்து யானைக்குட்டி கிணற்றிலிருந்து மீட்கப்பட்டது. சுமார் ஒரு வயதுடைய இந்த யானைக்குட்டி குழந்தைகளுடனும் பெரியவர்களுடனும் விளையாடிக்கொண்டிருந்த காட்சி பார்த்திருந்தவர்களுக்குப் பெரும் வேடிக்கையாகவிருந்தது.

## ரூ. 2 1/4 லட்சம் சொத்து பறிமுதல்

ஹைதராபாத்தில் என்ஜினியர் ஒருவர் விட்டை இரகசியப்பொலிசார் சோதனையிட்டு 61,000 ரூபா பணத்தையும், 50,000 ரூபா மதிப்புள்ள தங்க கட்டிகளையும், 62,000 ரூபா மதிப்புள்ள நில கொள்முதல் பத்திரங்களையும், 42,000 ரூபா மதிப்புள்ள சேமிப்பு பத்திரங்களையும் கைப்பற்றினர்கள்.

## சீன எச்சரிக்கை

பீகிங், ஆக. 8

கம்போடியா, அமெரிக்காவுடன் உறவை சீர்திருத்திக்கொள்வதற்கு எதிராக சீன எச்சரித்திருக்கிறது. உறவைமீண்டும் சீர்ப்படுத்துவது குறித்து திரு. ஹரிமன் கம்போடியா வரவிருக்கிருர்.

## கிருஷ்ணன் உகண்டா சாம்பியன்

கம்பாலா, ஆக 8

உகண்டா லான் டெனிஸ் சாம்பியனுக ராமநாதன் கிருஷ்ணன் வெற்றிபெற்றிருக்கிருர்.

## எடின்பரோவில் அடுத்த போட்டி

லண்டன், ஆக 8

அடுத்த காமன்வெல்த் விளையாட்டுப்போட்டி 1970-ம் ஆண்டில் எடின்பரோவில் நடைபெறும்.

## பல்கேரியாவில் காமராஜர்

சோபியா, ஆக. 8

காங்கிரஸ் தலைவர் காமராஜர் நேற்று ஹங்கேரியிலிருந்து பல்கேரியா வந்துசேர்ந்தார்.

# தமிழ் நாட்டுச் செய்திகள்

## 6400 சைக்கிள்கள்

வெளிநாட்டுச் சுற்றுப்பிரயாணத்திலிருந்து வருகிற 13ம் திகதி திரு காமராஜர் சென்னை திரும்புகையில் அவரது 64 வயதைக் குறிக்கும் வகையில் 6400 சைக்கிள்கள், 64 ஸ்கூட்டர்கள் ஒரே மாதிரியான 64 கார்கள் ஆகியவைகளுடன், விமான நிலையத்திலிருந்து அவர் ஊர்வலமாக அழைத்து வரப்படுவார்.

ஃ ஃ ஃ

## பிழைக்காத நோயாளி

''தமிழ்நாட்டு 'மந்திரி சபை பிழைக்காதநோயாளி' என மதியழகன் (தி.மு.க.) சட்டசபையில் கூறினர். ''பாவத்துக்கு பிராயச்சித்தமாக பக்தவத்சலம் ராஜினுமாச் செய்யவேண்டும். ஆனல் இன்னும் 7 மாதங்களில் வரும் தேர்தலில் அவரை நாங்களே அனுப்பி வைப்பேரம்'' என்றும் அவர் கூறினர்.

ஃ ஃ ஃ

## மனக்கசப்பு வேண்டாம்

மா நிலங்களிடையேமனக்கசப்பு ஏற்படுவதைத்தடுக்க மின்சார உற்பத்தித்திட்டங்களை டில்லி அரசாங்கமே அமைக்க வேண்டுமென மந்திரி ராமையா கூறினர்.

ஃ ஃ ஃ

## 600 குடியர்கள்

குடிபோதை வழக்கில் சென்னையில் கடந்த ஒரு வாரத்தில் 600 பேர் கைது செய்யப்பட்டனர்.

ஃ ஃ ஃ

## கார் புரண்டது

போடி தொகுதி சட்டசபை அங்கத்தினர் திரு சுந்தரவேலு சென்ற ஜீப் கார் மதுரைக்கருகில் தலைகுப்புற விழுந்தது. ஆனல் திரு. சுந்தரவேலு மயிரிழையில் உயிர் தப்பினர்.

ஃ ஃ ஃ

## கா.மு. ஷெரீப்

புதுக்கட்சி ஆரம்பிப்பது பற்றி விரைவில்முடிவு செய்வேன் என தமிழரசுக் கழகத்திலிருந்து விலக்கப்பட்ட கா.மு. ஷெரீப் (சினிமா கவிஞர்) திருப்பூரில் கூறினர்.

ஃ ஃ ஃ

## நரகசபையா?

'சென்னை நகரசபை ஒரு நகரசபையா அல்லது நரகசபையா என்றே சந்தேகமாயிருக்கிறது. எனவே அதை அரசாங்கம் கலைக்கவேண்டும். இதனல் நகரிலுள்ள 20 லட்சம்பேர் நன்றி செலுத்தியவர்களாவோம்' என ஸ்ரீமதி ஆனந்தநாயகி எம்.எல்.ஏ. கூறினர்.

ஃ ஃ ஃ

## புலவர்களுப் பஞ்சம்

தமிழ்ப்புலவர்களுக்கு வட ஆர்க்காடு மாவட்டத்தில் கடும் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. பள்ளிக்கூடங்களில் தமிழ் ஆசிரியர்கள் இல்லாததால் நெல்லை,குமரி மாவட்டங்களிலிருந்து தமிழ்ப் புலவர்கள் கொண்டுவரப்படுகிருர்கள்.

ஃ ஃ ஃ

## மர்ம மிருகம்

வடஆர்க்காடு மாவட்டத்தில் அகரம் சேரி, கூத்தபாக்கம் ஆகிய ஊர்களில் உடல் முழுதும் மயிர் அடர்ந்த ஒரு மர்ம மிருகம் இரவில் மக்களைக்கடித்து வருகிறது. 4பேரை முகத்தில் அது கடித்தது காரணமாக அவர்கள் ஆஸ்பத்திரியில் மாண்டார்கள்.

## ஜயப்பிரகாஷ்

கோடைக்கானல், ஆக. 8

ஷேக் அப்துல்லா வுடன் தாம் நடத்திய பேச்சுக்களின் விபரங்களை வெளியிட ஸ்ரீஜயப்பிரகாஷ் நாராயண் மறுத்துவிட்டார்.

## மூன்றரைக் கோடி புத்தகங்கள்

பீகிங், ஆக. 8

மாவோஸேதுங்கின் கருத்துக்களைக்கொண்ட 3 1/2 கோடி புத்தகங்கள் அடுத்த ஆண்டில் பிரசுரித்து வெளியிடப்படும் என சீன அறிவித்துள்ளது.

## சமய அறிவுப்போட்டி

சுழிபுரம், திங்கள்

வழக்கம்பரை சன சமூக பஜனைச் சபையினர் சமய அறிவுப் போட்டியொன்றை நடத்த ஏற்பாடுசெய்துள்ளனர். போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு தொல்புரம் இந்து சமய அபிவிருத்திச்சங்கத்தினர் பரிசுகளை வழங்க முன்வந்துள்ளனர்.

## கறிசுவையில்லை; இளைஞன்தற்கொலை

கிளிநொச்சி, திங்கள்

வட்டக்கச்சியைச் சேர்ந்த வி சந்தையா (22வயது) நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

இவரது மரணம் சம்பந்தமாக நடைபெற்ற மரண விசாரணையில் இவரது தாய் சாட்சியமளிக்கையில் தாம் சமைத்த கறி சுவையில்லை என தம்மை ஏசினுரென்றும் இதன்பின்னர் அவர் நச்சுத் திராவகம் அருந்தினுரென்றும் கூறினர். தந்தையும் சாட்சியமளித்தார்.

விசாரணைநடத்திய மரண விசாரணை அதிகாரி திரு. மு. யோகலிங்கம் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.



## புதிய சமாதான நீதவான்

யாழ்ப்பாணம், செவ்.

சுண்டிக்குளியைச் சேர்ந்த திரு. ஏ. ஜே. ஆசீர்வாதம் புதிய சமாதான நீதவானுக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கொழும்புத்துறை சாதனு போதனுலயங்களில் ஆசிரியராகவிருந்து, பள்ளிக்கூடங்களை அரசாங்கம் பொறுப்பேற்ற போது ஒய்வு பெற்றுக்கொண்டார். பாடசாலைகளுக்கான 2-ம் வகுப்புத் தொடக்கம் 9-ம் வகுப்பு வரைக்கான படிமுறைக் கணிதப் புத்தகங்களின் ஆசிரியருமாவார். இவர் வடமாகாண அச்சிடுவோர் சங்கக் காரியதரிசியும் 'விவேகி' மாத சஞ்சிகையின் நிர்வாக ஆசிரியருமாவார்.

# "ஏழு கடல்களை நீந்துவேன்!"

கல்கத்தா, ஆகஸ்ட் 8

ஆங்கிலக் கால்வாயையும், பாக். ஜலசந்தியையும் நீந்திக் கடந்த முதலாவது இந்தியரான மிகிர்சென், தமது அடுத்த 'லட்சிய' நீச்சலை வெளியிட்டிருக்கிருர்.

ஜிப்ரால்டர் ஜலசந்தி, போஸ்பரஸ், டார்டனல்ஸ் ஆகியவற்றை அடுத்தடுத்து ஆறு வாரங்களில் தாம் நீந்திக் கடக்கத் திட்டமிட்டிருப்பதாக மிகிர்சென் கூறினர்.

வருகிற 20ந் தேதிக்கும், 27ந் தேதிக்குமிடையே ஒரு தேதியில் அவர் நீச்சலை ஆரம்பிப்பார்.

''இந்த முயற்சிகளில் நான் வெற்றிபெற்றுல், உலகிலேயே ஏழு கடல்களை நீந்திய முதலாவது மனிதன் நானுகவே இருப்பேன்'' என பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் அவர் கூறினர்.

அடுத்த வார மத்தியில் தாம் ஜிப்ரால்டருக்குச் செல்லவிருப்பதாய்க் கூறிய சென், இதுசம்பந்தமாக இந்திய அரசாங்கத்தின் பூர்வாங்க அங்கீகாரத்தை எதிர்பார்ப்பதாயும் தெரிவித்தார். (பி. டி. ஐ.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

துக்கமும் பயமும் ஆசையின் குழந்தைகள். ஆசையை விட்டால் உங்களுக்கு துக்கமுமில்லை பயமுமில்லை.

—சுவாமி சிவானந்தர்.


ஈழநாடு

EELANADU National Tamil Daily. Post Box 49 JAFFNA.
Telegrams : EELANADU Jaffna. Telephone : 389

[illegible]ணம் பராபவ ஆண்டு ஆடி 24 (9-8-66)


# தேசிய பிரதமரே! வருக!

ஈழமணித்திருநாட்டின் முதல் தேசிய அரசாங்கத்தின் முதல் பிரதமரான டட்லி சேனநாயக்கா அவர்களே! முதல் முதலாக யாழ்ப்பாணத்துக்கு தாங்கள் விஜயம்செய்யும் இச்சமயத்தில், யாழ்ப்பாணப் பொதுமக்கள் சார்பாக 'வருக, வருக' என்று தங்களையும், தங்கள்சகாக்களையும் மனப்பூர்வமாக வரவேற்கின்றோம். தங்கள் வரவு நல்வரவாகுக!

சரித்திரத்திலே பதியத்தக்க இப்பொன்னாள், எப்போது வருமென்று பல மாதங்களாகப் பல வருடங்களாகக் காத்திருந்தோம். தமிழ் பேசும் மக்களாகிய நாங்களும் எங்கள் சிங்களச் சகோதரர்களைப் போல் சரிநிகர் சமானமாக தலைநிமிர்ந்து வாழ்ந்து, தங்களை வரவேற்கும் பாக்கியம் கிடைக்குமா என்று ஏங்கிக் கொண்டிருந்தோம். அந்த ஆவலைத் தீர்க்கக் கூடிய இந்நாள் எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியளிப்பதாகவுள்ளது.

புகழ்பெற்ற தங்கள் தந்தையாரும் தேசியத்தந்தையாருமான டி. எஸ். சேனநாயக்கா அவர்கள், அரசியல் ஞானிக்குரிய தீர்க்கதரிசனத்துடனே, சிங்களம், தமிழ் இவ்விரு மொழிகளுக்கும் சமமான அந்தஸ்து வழங்கவேண்டிய அவசியத்தை உணர்ந்து, அவ்விதமே பல்லாண்டுகளாகச் செய்தும் வந்தார். சமூக ஒற்றுமையில்தான் நாட்டின் முன்னேற்றம் அடங்கியுள்ளதென்பதையும், மொழி உரிமை அதற்கு அடிப்படை என்பதையும் கண்டார்.

ஆனால் அவருக்குப் பின் ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சற்றே 'அரசியல் கிரகம்' பிடித்தது. தாங்கள் விலகி மறைந்திருந்தீர்கள். அச்சமயம் வகுப்புவாத மூலம் தேர்தலில் வெற்றி பெறலாமென்ற தவறான எண்ணத்துடனே, தமிழுக்கு உரிமை மறுக்கப்பட்டது. தேர்தலில் தோற்றாலும் ஆட்சியிலிருந்த சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்து தங்கள்கட்சியினர், தமிழுரிமையைப் பறிக்கும் சட்டத்தைப் பீரங்கிப் பலத்துடன் நிறைவேற்றினர். பின் நடந்தவற்றைத் தங்களுக்கு நினைவூட்டத்தேவையில்லை.

அவ்வித அரசியல் பித்தலாட்டங்கள் நடக்கும் போது, தாங்கள் அரசியலிலிருந்து ஒதுங்கியிருந்தீர்கள். அச்சமயம் தங்கள் கட்சிக்குமட்டுமின்றி, நாட்டுக்கே ஏற்பட்ட கசப்பான சோதனைகள் ஜனநாயகத்திலே மறக்க முடியாதபடிப்பினைகளாக அமைந்தன. நிலைமையின் ஆபத்தை உணர்ந்து தாங்கள் மீண்டும் அரசியலில் பிரவேசம் செய்தீர்கள். கட்சித் தலைமையை மீண்டும் ஏற்று, வகுப்புவாதத்தைஒதுக்கி, தேர்தல் போர் நடத்தி, தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளின் நம்பிக்கையையும், ஒத்துழைப்பையும் வெற்றிகரமாகப் பெற்று தேசிய அரசாங்கத்தை அமைத்து, இலங்கைச் சரித்திரத்திலேயே ஒரு புதிய அத்தியாயத்தைஆரம்பித்திருக்கிறீர்கள்.

இப்பழைய காரியங்களை இச்சமயம் இங்கு நினைவு படுத்த ஒரு காரணமுண்டு. அரசியல் சதுரங்க விளையாட்டிலே எதிர்காலத்திலே சுதந்திரக்கட்சியுடன், ஐக்கிய தேசியக்கட்சியும் சேர்ந்து கொண்டுமீண்டும் தமிழர் உரிமையை மறுத்து அவர்களை நசுக்க முயற்சிநடக்குமோ என்ற கவலையும் பீதியும் இங்கு சில வட்டாரங்களில் இருக்கத்தான் செய்கின்றன. பிரதமர் பதவியைத் துச்சமாக மதிக்கும், உத்தம தேசாபிமானியான தாங்கள், அவ்வித கீழ்த்தரமான காரியங்களுக்கு இடம் தரமாட்டீர்கள் என்பது உறுதி.

ஆனால் தமிழர்கள் இழந்த உரிமைகளைப் பெறவில்லை. தங்கள் தந்தையார் தமிழுக்கு அளித்திருந்த அரசியல் அந்தஸ்து இன்னும் கிடைக்கவில்லை. உடனடியாக இல்லாவிடினும், படிப்படியாக அது மீண்டும் கிடைக்கும்படி செய்யவேண்டியுள்ளது. முந்தி பத்தாண்டுகள் நடந்த கொடுங்கோல் ஆட்சியிலே தமிழர் பட்ட இன்னல்களைத் தாங்கள் அறிந்திருப்பீர்கள். தமிழ்ப்பகுதிகளில் எவ்வளவு அபிவிருத்தி வேலைகளையும் செய்ய இடமளிக்கவில்லை. ஒரு பல்கலைக் கழகத்தையும், ஒரு துறைமுகத்தையும் அமைப்பதாக ஆசைவார்த்தைகள் கூறிக்கூறி ஏமாற்றியது தான் கண்ட பலன்.

அந்தப் படலம்முடிந்து தங்கள் தலைமையில் தேசிய அரசாங்கம் தமிழரின் ஒத்துழைப்புடனே பொறுப்பேற்றுள்ளதால், தமிழ்ப் பகுதி மக்களின் குறைகளை நீக்கவும், தேசிய ஆக்கவேலைகளைச் செய்யவும் நல்ல காலம் பிறந்துவிட்டதாகவே தமிழ் பொதுமக்கள் ஆவலுடன் எதிர்பார்த்து வருகின்றார்கள். துரதிர்ஷ்டவசமாக எங்கள் தலைவர்களிடையே விரும்பத்தக்க ஒத்துழைப்பில்லை. அதைச் சாட்டாகக் கொண்டு தமிழரின் நியாயமான கோரிக்கைகளை தாங்கள், தேசிய நன்மையைக் கருதி புறக்கணிக்கமாட்டீர்களென்பது எங்கள் பணிவான கோரிக்கையும், நம்பிக்கையுமாகும்.

தேசிய பிரதமர் என்ற முறையிலே தாங்கள் முதல்முதலாக இப்போதாவது வரமுடிந்தது மிக மகிழ்ச்சியளிக்கிறதென்றாலும், யாழ்ப்பாணத்தின் பல இடங்களுக்கும் வடமாகாணத்தின் பலபகுதிகளுக்கும் தாங்கள் செல்லாதிருப்பது வருத்தமளிக்கிறது. இப்பகுதிகளிலுள்ள மக்களனைவரும், தங்களைப் பார்க்கவும், தமது குறைகளை எடுத்துச்சொல்லவும் ஆவலோடு காத்திருக்கிறார்கள். கூடிய விரைவில் தாங்கள் இப்பகுதிக்கு மீண்டும் வந்து பலநாட்கள் சுற்றுப்பிரயாணம் செய்து, தமிழ்மக்களின் அமோகமான அபிமானத்தைப் பெற்று, தாங்கள் காலியில் நேற்று முன்தினம் கூறியதுபோல், தேசிய ஒற்றுமையையும் அதன்மூலம் பொருளாதார சுதந்திரத்தையும் நாடு பெறுமாறு செய்ய வேண்டுமென்பதே எங்கள் மனப்பூர்வமான பிரார்த்தனையாகும்.

# எல்லோருக்கும் சமநீதி; சமவாய்ப்பு; சமசந்தர்ப்பம்

## பிரதமருக்கு பாராட்டு; வேலைவாய்ப்புக்கு கைத்தொழில் திட்டங்கள்

### காங்கிரஸ மாநாட்டு தீர்மானங்கள்

யாழ்ப்பாணம், திங். தமிழ்க்காங்கிரஸின் நேற்றைய மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

1. இராமநாதன் அரங்கில் தனது 21வது வருடாந்த மகாநாட்டை நடத்தும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சென்ற ஒரு வருடகாலத்தில் பிரதமர் சாதித்துள்ள பின்வரும் விஷயங்களுக்காகத் தனது மனத்திருப்தியைத் தெரிவித்துக்கொள்கிறது.

(அ) ஜனநாயக சக்திகளை ஒன்று திரட்டியது.

(ஆ) நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும் நிலை நாட்டியது.

(இ) வெளிநாட்டு விவகாரங்களில் மண்டலசார்பற்ற கொள்கையை மீண்டும் வலியுறுத்தியது.

(ஈ) இன. மதத்துவேஷங்களைக் கிளப்பி அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மையைக் குலைத்துவிடச் சில சதிகாரச் சக்திகள் எடுத்த முயற்சிகளை முறியடித்தல்.

(உ) ஜனவரி 8ந் தேதிய வேலைநிறுத்தத்தை வெற்றிகரமாகச் சமாளித்தது.

(ஊ) மக்களின் பொருளாதார நிலைமையைச் சீர்படுத்தச் சீரான நடவடிக்கை எடுத்தது, அதிக வேலை வாய்ப்பளிக்க நடவடிக்கை மேற்கொண்டது.

**கட்சியின் கொள்கை**

2. அகிலஇலங்கைத்தமிழ்க் காங்கிரஸ் ஆரம்பமான காலத்திலிருந்தே ஒற்றையாட்சியின்கீழ் ஐக்கிய இலங்கையை உருவாக்க உறுதியுடன் உழைத்துவந்துள்ளது. இலங்கையின் எப்பகுதியிலும் சகல இனத்தவரும், சகல மதத்தவரும் ஐக்கியத்துடன் தன்மானத்துடனும், கௌரவத்துடனும், சம உரிமையுடன்ஒன்றாக இணைந்து சம அந்தஸ்துடன் சம வாய்ப்புகளுடன் வாழவேண்டுமென்ற தனது நம்பிக்கையை மீண்டும் வலியுறுத்துகிறது.

3. சிங்கள மக்களுக்குச் சிங்களம் எப்படியோ அப்படியே இந்த நாட்டின் எப்பகுதியில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்கும் தமிழ் என்ற ஜனநாயக தத்துவ அடிப்படையில் மொழிப் பிரச்னை தீர்க்கப்படவேண்டும். விரைவில் தீர்க்கப்படவேண்டுமென்ற தனது நம்பிக்கையை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் மீண்டும் வலியுறுத்துகிறது.

4. மொழிப் பிரச்னை, பிரஜா உரிமைப் பிரச்னை குடியேற்றத் திட்டம் பற்றிய பிரச்னை ஆகிய முக்கிய பிரச்னைகளுக்கு கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட ரீதியில் சர்வ கட்சி மகாநாடு மூலம் நியாயமான கௌரவமான நிரந்தரமான தீர்வு கண்டாலன்றி வேறு மார்க்கத்தில் தீர்வுகாணமுடியாது என தமது நம்பிக்கையை மீண்டும் வலியுறுத்துகிறது.

29-ம் ஷரத்தை நீக்கக் கோரும் எதிர்க்கட்சிகளின் முயற்சியை தோல்வியுறச் செய்த பிரதமரைப் பாராட்டும் அதேசமயத்தில் தமிழ்க் காங்கிரஸ் தான் பின்வரும் விஷயங்களில் நெடிதுகாலமாக கொண்டிருக்கும் நம்பிக்கையை மீண்டும் வலியுறுத்தவிரும்புகிறது.

(அ) இன, மத, ஜாதிப் பாகுபாடின்றி சட்டத்தின் முன்னிலையில் எல்லோருக்கும் சமமான பாதுகாப்பு அளிக்கப்படவேண்டும்.

(ஆ) இன, மத, ஜாதி அடிப்படையில் அரசாங்கம் பாகுபாடு காட்டப்படாதவாறு பாதுகாப்பளிக்க வேண்டும்.

(இ) அரசாங்க, அரசாங்க கார்ப்பரேஷன், ஸ்தல ஸ்தாபன சேவை ஆகியவற்றில் வேலைவாய்ப்பு அல்லது எந்தப் பதவிக்கான நியமனம் ஆகியவற்றில் சகல பிரஜைகளுக்கும் சம சந்தர்ப்பம் வழங்குதல் வேண்டும்.

**கட்டாய நாடுகடத்தல் கூடாது**

இலங்கையிலுள்ள இந்திய பாகிஸ்தானிய பிரஜைகள் பிரஜாவுரிமை விஷயத்தில் பிரதமமந்திரி திரு டட்லி சேனநாயக்கா மேற்கொள்ளும் நடவடிக்கைகளை அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சி வரவேற்கும் அதே நேரத்தில், கட்சி தனது கோரிக்கைகளை மீண்டும் வற்புறுத்த விரும்புகிறது. இந்திய, பாகிஸ்தானிய பிரஜைகளை இந்த நாட்டிலிருந்து கட்டாயமாக கடத்துவதை கட்சி வன்மையாக எதிர்க்கின்றது. இலங்கைப் பிரஜைகளாகப் பதிவுசெய்யப் படுபவர்களுக்கு தனியான வாக்காளர் இடாப்பு வைத்துக்கொள்வதற்கும் கட்சி எதிர்ப்புத் தெரிவிக்கிறது. இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்யப்படுபவர்களுக்கு மற்றைய இலங்கையரைப்போன்று சகலஉரிமைகளும், சலுகைகளும் வழங்கப்படவேண்டுமென் பதை கட்சி கோருகின்றது.

**வேலையில்லாத் திண்டாட்டம்**

தமிழ்பேசும் மக்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துக் கொண்டு செல்வதையிட்டு கட்சி வருத்தம் தெரிவிக்கிறது. கைத்தொழில்களையும் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களையும் ஆரம்பித்து விரைவில் இப்பிரச்னையைத் தீர்த்து வைக்கவேண்டுமென்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்கட்சி அரசாங்கத்தைக் கோருகிறது.

**தொழிற்சாலைகளை நிறுவுக**

தமிழ்ப் பேசும் மக்களிடையே நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்கும்பொருட்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொழிற்சாலைகள் நிறுவப் படவேண்டும். சீனித்தொழிற்சாலை, நெசவுத்தொழிற்சாலை, உரப்பசளைத்தொழிற்சாலை ஆகியவை இப்பகுதிகளில் நிறுவப்படவேண்டும். புல்மோட்டையில் காணப்படும் மண்ணை கண்ணாடித் தொழிற்சாலை போன்றவற்றுக்குப் பயன்படுத்த முன்வரவேண்டும் என்றும் அரசாங்கத்தை தமிழ்க்காங்கிரஸ் கட்சி கோருகிறது.

**இராமநாதன் இந்து பல்கலைக் கழகம்**

முன்னருள்ள அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள இராமநாதன் இந்துப் பல்கலைக் கழக மசோதாவை பாரிமெண்டுக்குக்கொண்டுவரவேண்டுமென்று தேசிய அரசாங்கத்தை காங்கிரஸ்

(12-ம் பக்கம் பார்க்க)

# ஐயாறன் எழுதுவது

இன்று யாழ்ப்பாணத்துக்கு வரும் பிரதமர் டட்லி சேனநாயகா, முதலில் நல்லூர் கோவிலுக்குச் சென்று முருகனை வழிபடுவதாக அறிந்ததும் மிக மகிழ்ச்சியாக இருந்தது. தெய்வத்தை மறவாமல், அவர் அவனைப் பெற்றால் தொடங்கும் காரியம் எல்லாம் வெற்றியல்லவா?

இந்த நிகழ்ச்சியிலே தமிழ்ப் பிரதிநிதிகள் அனைவரும் கட்சிமுதலிய வேற்றுமை இல்லாமல் கலந்து கொள்ளப்போகிறார்களாம். பலே பலே! ஒற்றுமை ஒற்றுமை என்கிறோம். தெய்வத்தின் மூலம் அல்லாது அந்த ஒற்றுமை வேறு எப்படி ஏற்படமுடியும்.

பௌத்த சமயத்தைச் சேர்ந்த பிரதமர் முதலில் முருகன் கோவிலுக்குவந்து, பிறகு புத்தர் கோவிலுக்குச் சென்று வழிபடுவது குறிப்பிடத்தக்கது. தமிழ்த் தலைவர்களும் குறுகியசமயவேற்றுமைகளை விட்டு, சமய சமரசத்தை வளர்ப்பின் அதனால் எவ்வளவு பிரச்னைகள் தீரும்!

ஃ ஃ ஃ

முருகன் இந்துக்களுக்கும், பௌத்தர்களுக்கும் மட்டுமா சொந்தம்? இல்லை இல்லை. கொழும்பிலே ஆடிவேல் ரதம் வெள்ளவத்தையிலிருந்து இரவில் புறப்பட்ட காட்சியை, ஓரன்பர் பார்த்தாராம். கோவிலை விட்டு ரதம் ஜகஜ்ஜோதியாக வெளிப்பட்டு வரும் போது, அங்கு குழுமி இருந்த பறங்கிகள் உள்ளிட்டு, பலவேறு மதத்தவரும், இனத்தவரும், தங்களையும் அறியாமல் கையெடுத்துக் கும்பிட்டார்களாம். அந்தக் காட்சியைக் காணப் பரவசமாக இருந்தது என்றார் அந்த நண்பர்.

வெள்ளவத்தை சம்மாங்கோட்டார் ஆலயத்தில், ராஜாங்க அமைச்சர் ஜே. ஆர். தம்பதிகளும், பல அமெரிக்க யாத்திரிகர்களும், வள்ளிதேவ சேனாசமேத சுப்பிரமணியப் பெருமானை வழிபட்டதைக் கண்டேன். பூட்சை கழற்றி காரிலேயே வைத்து விட்டு, பயபக்தியுடன் முருகன் திருமுன் வந்து நின்றனர். "தீயவை புரிந்தாரேனும், முருகவேள் திருமுன் புற்றால் தூயவராகிடு மேலைத்தொல்கதியடைவ"ரென்பது ஆன்றோர்வாக்கல்லவா?

குருக்கள் பஞ்சாலாரத்தி எடுத்துவிட்டு அமைச்சர் முன் காட்டினார். பாவம்! மந்திரிக்கு என்ன செய்வதென்று புரியாமல் சற்று திகைத்து பின்னர் சமாளித்தார். அவர்கள் எல்லாருடைய நெற்றியிலும் விபூதி, சந்தனம், குங்குமம் வைத்தார் குருக்கள். அந்த முகமே புதுப்பொலிவாக இருந்தது. அவர்களுக்கெல்லாம், சிறப்பாக அமெரிக்க யாத்திரிகர்களுக்கு எவ்வளவு மகிழ்ச்சி தெரியுமா?

ஃ ஃ ஃ

பல வருடங்களுக்கு முன்பாக கொழும்பு ஜிந்துப்பிட்டி எனும் ஜயந்தி நகர் முருகன் கோயிலில் கண்ட ஒருகாட்சி இப்போது நினைப்பு வருகிறது. தேசபிதா பெரிய சேனநாயகா இறந்த முதலாம் ஆண்டு சிரார்த்த தினத்தன்று அக்கோவிலில் விசேஷ பூசை நடந்தது. சேர் கந்தையா வைத்தியநாதனுடன் டட்லியும் வந்து சகஸ்ரநாமம் முடியும்மட்டும் சுமார் ஒரு மணி நேரத்துக்குமேல் மூலஸ்தானத்தைப் பார்த்த வண்ணம் நின்றுகொண்டே

(1[illegible]-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணைக் கவரும்
தங்க, வைர நகைகளுக்கு

போன் 585
PHONE 585
K. N. M.
மீறன் சாஹிப்
தங்கப்பவுண் நகை மாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.



தரமான

தங்க - வைர நகைகளை
தெரிவுசெய்வதற்கு
சி. தம்பிப்பிள்ளை அன் சன்
( நகை வியாபாரம் )
191, K K.S ரோட், - யாழ்ப்பாணம்.

# தேசீய சிற்பி

—"கதிர்வேல்"—

ஏறக்குறைய 12 வருடங்களுக்குப் பின்னர் இந்நாட்டின் பிரதமர் ஒருவர் யாழ்ப்பாணக்குடாநாட்டுக்கு விஜயம் செய்கின்ருர். இந்நாட்டைக் கடந்த பத்து வருடங்களாக ஆட்சிசெய்த அரசாங்கமானது இந்நாட்டின் மிகப்பெரிய சிறுபான்மையினமான தமிழினத்தை அவர்கள் பிறந்த நாட்டிலேயே, அந்நியப் பிரஜைகளாக்கி, நாட்டின் ஆட்சியிலே அவர்களைப்பங்கற்றவர்களாக்கி அமைச்சரவையிலே அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்காது. துவேஷநோக்குடன் பல இன்னல்களையேற்படுத்தி, சாதி, இன, மத பேதத்தைத் தூண்டிப் பதவியிலேயிருந்தது. எல்லாக் கோணங்களிலும், எல்லாத் திசைகளிலும், இந்நாட்டுத் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டது மாத்திரமின்றி, தனியார் துறையிலோ, அரசாங்க சேவையிலோ அவர்கள் தொழில் வசதிபெறச் செய்யும் வாய்ப்புகளைப் படிப்படியே குறைத்து இருபெரும் இன மக்களிடையே குரோதத்தை ஏற்படுத்தி அதன் மூலம் தாம் பதவியிலிருக்கவேண்டுமென்று எண்ணிக்கொண்டிருந்தது. இந்தச் சமயத்தில் தான் இந்த நாட்டிலே தேசிய ஒற்றுமைக்கு வித்திட்டு அதன் சிற்பியாக விளங்கிய பிரதமர் கௌரவ சேனநாயக்காஅவர்கள் பிரதமர் என்ற வகையில், இந்நாடு முழுவதற்கும் தலைவர் என்ற முறையில் யாழ் நகருக்கு விஜயம்செய்கின்ருர். ஆகவே தமிழ் மக்கள் அவரைப் பரிவுடனும் மகிழ்ச்சியுடனும் வரவேற்கப் போகின்றனரென்ருல் அதில் ஆச்சரியமெதுவுமில்லை.

பிரதமர் கௌரவ சேனநாயக்கா இந்நாட்டில் தேசிய ஒற்றுமைக்கு வித்திட்ட முதலாவது பிரதமர் மாத்திரமன்றி, சகல கட்சிகளையும் ஒன்று சேர்த்து, சகல மக்களையும், இன, மத, மொழி வேறுபாடின்றி ஒரே கண்கொண்டு நோக்கி அவர்களுக்கு இந்நாட்டின் ஆட்சியிலே பங்களித்து ஓர் ஜனநாயக தேசிய அரசாங்கத்தினை அமை

(10-ம் பக்கம் பார்க்க)

# நீதியின் வழியில் நிற்போய் வருக!

— இ. நாகராஜன் —

சிங்களர் தமிழர் நட்புச்
சிதைவுறச் சிறுமை தேங்க
தங்களின் கட்சி ஆட்சி
தழைத்திடச் செய்தார் இன்னற்
கங்குலால் ஒளிகாணுது
கலங்கினர் மக்கள் வானச்
செங்கதிர் பூத்த துன்ருல்
சீர்மையே பெற்ருேம் இந்நாள்

சாதிபல் சமயம் என்றே
தனித்தனி பகுத்து நாட்டில்
நீதியை மறந்தார் நேர்மை
நெறியினில் விலகி நின்றே
சாதியின் பெயரால் தீய
சக்திகள் வளர்த்தார் இன்று
தீதிலாத் தேசியத்தின்
செழுமையைத் தேங்க வைத்தாய்

(10-ம் பக்கம்பார்க்க)

# -பெரிய -இனிய -தலைவர்

—எஸ. சிவசுப்பிரமணியம்—

பிரதம மந்திரியின் யாழ்ப்பாண விஜயம் இலங்கை மக்கள் உள்ளத்தில், சிறப்பாக தமிழ் மக்களிடையே, ஒருபெரும் எழுச்சியை உண்டாக்கியிருக்கிறது. இவ்வெழுச்சிக்கு நல்லநியாயங்களுண்டு. கிட்டத்தட்ட பத்து வருடங்களுக்குப் பிறகு இந்நாட்டின் பிரதமர் யாழ்ப்பாணத்துக்கு வருகிருர். இது ஒன்று. மற்றது பிரதமராயிருப்பவர் திரு. டட்லி சேனநாயகா ஆதலினுல். மூன்ருவது, அவர் தற்கால இலங்கையின் தலைசிறந்த சிருஷ்டிகளில் ஒருவராகிய திரு. டி. எஸ். சேனநாயகாவின் புதல்வர் என்பதனுல்.

திரு. டட்லி சேனநாயகா யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்ய ஒப்புக் கொண்டது மிகவும் நன்றியறிதலுக்குரியது. பிரதம மந்திரி இலங்கையின் எல்லாப் பாகங்களுக்கும் விஜயம் செய்து நாட்டு மக்கள் எல்லோருடைய தேவைகளையும் அறிந்து கொள்ள வேண்டியது சந்தேகமில்லாமல் அவரது கடமையே. மகிழ்ச்சிக்குரிய இந்தச் சந்தர்ப்பத்தைவிட்டு தமிழ் மக்களும் தமிழ் தலைவர்களும் தமிழ் பார்லிமெண்ட் உறுப்பினர்களும் தங்களைப் பாராட்டிக் கொள்ளலாம். கடைசியாகக் கூறப்பட்டவர்களிடையே கூடுதலான ஒத்துழைப்பு இருந்திருக்குமாயின் இன்னும் நன்ருயிருக்கும்.

இந்த நூற்ருண்டில் இலங்கை ஈன்றெடுத்த மிகவும் நேர்மையான தலைவர்களில் ஒருவர் என்ற பெருமை திரு. டட்லி சேனநாயகாவுக்குண்டு. அவர் நேர்மைக்கும், பொதுநல விருப்பத்துக்கும், சுயநலமற்ற தன்மைக்கும் பேர் போனவர். அவர் பிழைகள் செய்யக்கூடும். ஆயின்

(11-ம் பக்கம் பார்க்கப்)

பிரதமரே! உங்களை வரவேற்பதில்
அகமகிழ்கிருேம்
ஆசீர்வாதம் பிறெஸ் & புத்தகசாலை
பிரசுரிப்பாளரும் புத்தக விற்பனையாளரும்
கிளை:
61, பெரியகடை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
32, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

Sonnenschein
நீடித்து உழைப்பது


சொனென்ஷீன்
பற்றறி ஒன்றே
ஜெர்மன் தயாரிப்பு
வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்
துரை அன் கோ
23/3, ஸ்ரான்லி ரோட், — யாழ்ப்பாணம்.

நீங்கள் றேடியோவைப்பற்றி எண்ணும்போது
உடனே எங்கள் ஸ்தாபனத்துடன் தொடர்பு
கொள்ளுங்கள்.
புதுமையான பலவித றேடியோக்கள் விற்பனைக்கும்
றிப்பயர் நல்ல முறையில் குறைந்த விலையில்
செய்வதற்கும்

எஸ். சுலைமான்கண்டு அன் பிரதர்
5 — 7, மொம்சாக் கட்டிடம்
ஸ்ரான்லி வீதி, — யாழ்ப்பாணம்.


எமது
ஆதரவாளர்களுக்கோர்
நற்செய்தி!
புது டிசைன்களில்
ஏராளமான
'பிரேம்கள்'
வரவழைத்திருக்கின்ருேம்
கணிசமான விலைகளில்
எம்மிடம் கிடைக்கும்.
வடமாகாணத்தில்
முதன்மை வாய்ந்த
மூக்குக்கண்ணுடி
வியாபாரிகள்
எம். எஸ். எம். ஜுனைட்
(மூக்குக்கண்ணுடி தயாரிப்பாளர்)
144, கே. கே. எஸ். ரோட், — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாட்டின் பிரதமர். வேலைகளோ பல. ஆனாலும் கலைக்கும் கலைஞர்களுக்கும் அவர் எப்பொழுதும் தனி மதிப்பளிப்பவர். சமீபத்தில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த பிரபல தென்னிந்திய நடிகை சரோஜா தேவி பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவைச் சந்தித்து நடராஜர் விக்கிரகம் ஒன்றை அன்பளித்தார்.

**For Hire**

Chairs, Tumblers, Plates, Benches,
Ice-Cream Cups, Trays Etc.

*Centrally Situated*

*Courteous Service*

**BARTON MATHER**

110, Main Street, - - JAFFNA.

# இன்று இங்கு வரும் - - -

யாழ்ப்பாணம், செவ்வாய்

**இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ்செய்யும் தேசிய அரசாங்கத்தின் மந்திரிகள், உதவி மந்திரிகள் மற்றும் எம். பி.க்களில் சிலரைப் பற்றிய விபரங்களை இங்கு காணலாம்.**

## திரு. டொன் பிலிப் ருபசிங்கே குணவர்த்தன

தேசிய அரசாங்கத்தில் கைத்தொழில், மீன்பிடி மந்திரியாக இருக்கிறார். இவர் எஸ் டபிள்யு. ஆர். டி பண்டாரநாயக்காவின் அரசாங்கத்தில் 1956-59 வரை மந்திரிப் பதவி வகித்தவர்.

மகா ஜன எக்ஸத் பெரமுனையின் தலைவரான இவர் இன்று பாராளுமன்றத்தில் அதன் ஒரே பிரதிநிதியாக விளங்குகிறார்.



பிலிப் குணவர்த்தன

தமது வாழ்க்கையின் ஒரு கட்டத்தில் தீவிர மார்க்ஸியவாதியாக விளங்கிய இவரது உர்சாகத்தைக் காலம் மதப்படுத்தியுள்ளது மார்க்ஸியத்திற்கு அடிமையாக இருந்த இவரது இளம்வயதில், அதன் பலனைச் சிறைக்குச் சென்றதுடன், தனது எம். பி. பதவியையும் சிலகாலம் இழக்கநேரிட்டது. கடந்த முப்பதுவருட பாராளுமன்ற வாழ்க்கையில் திரு. பிலிப் எதிர்கட்சிப் பேச்சாளராகச் சரி, அரசாங்க மந்திரியாகச் சரி கடுமையாக உழைத்துள்ளார்.

திரு. பிலிப்புக்கு முதன் முறையாக மந்திரிப் பதவி கிடைத்தது 1956ம் ஆண்டில் பதவிக்குவந்த பண்டாரநாயக்கா அரசாங்கத்தில்தான். ஆனால் மந்திரி சபைக்குள் கிளம்பிய வேற்றுமைகள் காரணமாக திரு. பிலிப்பும் அவரது சகாவான திரு. பி. எச். வில்லியம் டி சில்வாவும் மந்திரிப் பதவியினின்றும் ராஜினாமா செய்தனர்.


ஆனால், அவர் மந்திரியாக இருந்த குறுகிய காலமான மூன்று வருடங்களில் தனது பெயரை நிலைநாட்டும்வகையில் பல சேவைகளைச் செய்தார் திரு. பிலிப். அவற்றுக்குச் சிகரமாக விளங்குவது அவரது நெற்காணி மசோதாவாகும்.

1965ல்நடைபெற்ற தேர்தலில் திரு. பிலிப்பின் மகாஜன எக்ஸத் பெரமுனை 60 அபேட்சகரை நிறுத்தியது. ஆனால், திரு. பிலிப் ஒருவரே வெற்றிபெற்ருர். தேர்தல் முடிந்தபின் அமைக்கப்பட்ட தேசிய அரசாங்கத்தின் மந்திரி சபையில் திரு. பிலிப்பும் சேர்க்கப்பட்டார்.

ஃ ஃ ஃ

## திரு. சார்ல்ஸ் பெர்ஸிவல் டி சில்வா

ஸ்ரீ லங்கா சுதந்திரசோஷலிசக் கட்சியின் தலைவரும், திருமதி பண்டாரநாயகாவின் அரசாங்கத்தின் வீழ்ச்சிக்குக் காரண கர்த்தாவுமாவர். மின்னேரியாவில் இவரை வீழ்த்தப் பகிரதப் பிரயத்தனங்கள் செய்யப்பட்டும், அவருடையபெரும்பான்மைவாக்குகளை 1960ல் 7312லிருந்து 1965ல் 1130க்குக் குறைக்க முடிந்தது.



சீ. பீ. டி. சில்வா

திரு. சி. பி. டி. சில்வா தேசிய அரசாங்கத்தில் காணி, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சராக இருப்பதுடன், ஜனப்பிரதிநிதிகள் சபை முதல்வராகவும் இருக்கிருர்.

1935ல் சிவில் சேவையில்

(7-ம் பக்கம் பார்க்க)

## தேசியத் தலைவரே!
## ஐக்கியத்தின் உருவே!

எங்கள்  பிரதமரே

வருக!!

உங்கள் வரவு

நல்வரவாகுக!

**யாழ் மெட்டல் இன்டஸ்றீஸ்**

250, 252, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 7049

## ஆறுமுகம் நல்லதம்பி

75, கன்னதிட்டி, போன்: 664 யாழ்ப்பாணம்.

தங்கப்பவுண், வயிரம்,

பலவித இரத்தினக்கற்கள்

சகாயமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்

ஓடர் நகைகள்

குறித்த தவணையில் உத்தரவாதத்துடன்

செய்து கொடுக்கப்படும்.

## ஜெனரல் இன்டஸ்றீஸ் லிமிட்டெட்

பழைய டயர்களைப் புதுப்பிக்கும் வேலைகளுக்கும்

சகலவிதமான ரப்பர் சாமான்களுக்கும்

தொழில் நிலையங்களுக்குத் தேவையான

தற்காலிக கட்டடத் தளபாடங்கள் ஆகியவற்றுக்கும்

எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

20, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

45, அம்பலவாணர் ரோட், யாழ்ப்பாணம்

போன்: 7024

# --- அமைச்சர்கள் எம்.பி.க்கள் சிலர்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த இவர், தொடர்ந்து 15 வருடங்களாக நாட்டின் பல பாகங்களிலும் உயர் பதவிகளில் பணியாற்றினுர் 1950ல் அரசாங்க சேவையிலிருந்து விலகி, 1956ல் திரு எஸ். டபிள்யு. ஆர், டி. பண்டாரநாயகா ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை அமைத்த பொழுது அவருடன் தாமும் சேர்ந்து கொண்டார்

1952ல் பொதுத்தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அபேட்சகராக இவர் போட்டியிட்ட பொல்லநறுவைத் தொகுதியில் இவர் அரசாங்க சேவையில் இருக்கும்போது அதிக கவனம் செலுத்தியிருந்தவராதலால், அங்கு அவர் கணிசமான அளவு பெரும்பான்மையுடன் வெற்றி பெற முடிந்தது. 1956லும் அவர் வெற்றி பெற்றுர்.

திரு. பண்டாரநாயகாவுக்கு அடுத்தபடியாக அதிக செல்வாக்குப்பெற்ற தலைவராக திரு.சி.பி. டி. சில்வா விளங்கினுர். மார்ச் 1960ல் திருமதிபண்டாரநாயகாவுக்குப் பக்கபலமாக இருந்து தேர்தல் பிரசாரம் செய்தார். மார்ச், 1960ல் அவர் புதிய மின்னேரியாத் தொகுதிக்கு 8063 பெரும்பான்மை வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்டார். எதிர்க்கட்சித் தலைவருமானுர். திரு பண்டாரநாயகாவின் மரணத்துக்குப்பின் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர் பதவியை ஏற்ற திரு சில்வா, மே 7, 1960ல் அப்பதவியை ராஜினுமாச் செய்து, திருமதி பண்டாரநாயகாவின் பெயரைப்பிரேரித்தார்.

ஜூலை 1960லும் மின்னேரியா எம்.பி.யாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். திருமதி பண்டாரநாயகா அவரை விவசாய, காணி, நீர்ப்பாசன மின்சக்தி அமைச்சராக நியமித்தார். ஜனப்பிரதிநிதிகள் சபை முதல்வராகவும் அவர் இருந்தார்.

1964ல் திருமதி பண்டாரநாயகா இடதுசாரிகளுடன் கூட்டுச் சேர்ந்ததை ஆட்சேபித்து திரு. சில்வா அரசாங்கத்திலிருந்து விலகினுர். பின்பு, தனது சொந்தக்கட்சியொன்றை ஆரம்பித்தார். அதுதான் ஸ்ரீலங்கா சுதந்திர சோஷலிசக் கட்சி. அதன் அபேட்சகராயிகச்மப 1965ல்போட்டிட்டு, வெற்றியீட்டினுர். யூ.என்.பிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரசோஷலிசக் கட்சிக்குமிடையே ஏற்பட்டிருந்த ஓர் ஒப்பந்தப்படி அவர் திரு, டட்லி சேனநாயகாவின் மந்திரிசபையில் இடம் பெற்றுர்.

திரு. சில்வா ஓர் பிரம்மசாரி. கிராமிய மக்களின் நலனில் அக்கறை மிகுந்தவர். பல நல்ல நீர்ப்பாசன, காணி அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கியுள்ளார். எதிர் காலத்திலும் உருவாக்கத் திட்டமிட்டுள்ளார்.


ஃ ஃ ஃ

## திரு. எட்வின் லொக்கு பண்டா ஹுருல்ல

தேசிய அரசாங்கத்தின் போக்குவரத்து மந்திரியாவார். அமைதியான சுபாவமும், சரளமான பழக்கங்களையும் கொண்ட இவர், முதல் முறையாக 1956-ம் ஆண்டில் ஹொரெவப்பத்தான தொகுதி எம். பி. யாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்தத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட எட்டே எட்டு யு. என். பி. அங்கத்தவர்களில் இவரும் ஒருவர்.

1938ல் அரசாங்க ஊழியர் சேவையில் சேர்ந்த இவர், படிப்படியாக காரியாதிகாரியாக உயர்ந்தார். பொதுத்தேர்தலில் பங்கு பற்றுவதற்காக தமது டி. ஆர். ஓ. பதவியை ராஜினுமாச் செய்யும்போது, இவர் வட மத்திய மாகாணத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்தார்.

முதன்முறையாக 1956ல் பாராளுமன்றத்துக்குத் தேர்தெடுக்கப்பட்ட இவர், தொடர்ந்து நடைபெற்ற மார்ச் 1960, ஜூலை 1960, மார்ச் 1965 ஆகிய தேர்தல்களில் தமது தொகுதி எம். பி.யாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். திரு. டட்லி சேனநாயக்கா இவரையும் தனது மந்திரி சபையில் சேர்த்துக்கொண்டார். இளம் மந்திரிகளில் இவரும் ஒருவர்.



ஈ. எல். பீ. ஹுருல்லே

வடமத்திய மாகாணத்தில் காரியாதிகாரியாகப் பணியாற்றியபோது, கிராம அபிவிருத்திக்கும், கூட்டுறவு வேலைக்கும் அதிக நேரத்தைச் செலவிட்டார். அம்மாகாணத்தில் முதன் முறையாக ஜப்பானிய முறை நெற் பயிற்சி செய்கையை ஆரம்பித்தவர் இவரே.

ஃ ஃ ஃ

## திரு. மொஹத்தலாகே டிங்கிரிபண்டா

தேசிய அரசாங்கத்தின் உணவு, விவசாய மந்திரி. அரசாங்க சேவையில் காரியாதிகாரியாகச் சேர்ந்த இவர், இரண்டு வருடங்களில் அதிலிருந்து ராஜினுமாச் செய்துவிட்டு1940ல் நுவரெலியா உபதேர்தலில் போட்டியிட்டு வென்ற போதும், தேர்தல் ஆட்சேபனை மனு ஒன்றினுல் ஆசனத்தை இழந்தார்.

1947ல் மத்துரட்டை தொகுதியில் யு. என். பீ. அபேட்சகராகப் போட்டியிட்டு வென்றுர். 1950ல் அவர் தொழில், சமூக சேவை மந்திரியானுர். 1952 தேர்தலிலும் எம். பி.யான அவர் கல்வி மந்திரி

(8-ம் பக்கம் பார்க்க)



மக்கள் திலகம் எம். ஜி. ஆர். மக்கள் பிரதமரைச் சந்தித்து அன்பின் அடையாளமாக பரிசளித்தார். பிரதரும் அதை அன்புடன் ஏற்றுக்கொண்டார்.

பிரதமரின் முதலாவது யாழ்ப்பாண விஜயத்தின்போது

அவரை மனமுவந்து வரவேற்கிறேம்

விநியோகஸ்தர்கள்:

இலங்கைப் புகையிலைக் கொம்பனியின் சிகரெட்டுகள்
மலிபன் பிஸ்கோத்துக்கள்
தங்காறு தேயிலை
கண்டோஸ் சொக்லெட்டுகள்
நாஷனல் பிளேட்டுகள்
வேல் கற்பூரம்
ஃபாரீலீஸ் ரஸ்குகள்
பேப்பர், அப்பியாசப் புத்தகங்கள்

மொத்த, சில்லறை விற்பனையாளர்

பலசரக்குச் சாமான்கள், மருந்து வகைகள்,
பி. ஸி. ஸி. உற்பத்திகள், சி. டபிள்யூ ஈ. யும்
மற்றும் துணிமணிகளும், மோட்டார் உப பகுதிகளும்
உதிரிப்பாகங்களும், பாட்டரிகள்,
ரேடியோ, ரேடியோ உதிரிப்பாகங்கள்,
ஹம்பர் சைக்கிள், பெட்ரோல்,
பெட்ரோலியம் உற்பத்திகள்

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்

சிறந்த முறையில்
★ நிக்கல் ★ குரோமியம்
★ சில்வர் ★ கோல்ட்
★ ஒக்சடசிங்
பிளேற்றிங் செய்வதற்கும்
தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள்
திருத்துவதற்கும்
எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்!
செல்வா மோட்டோர்ஸ் அன் மெட்டல் இன்டஸ்றீஸ்
21, ஸ்ரான்லி ரேட், — யாழ்ப்பாணம்.

சிலோன் தியேட்டர்ஸ் திரைகளில்
தினமும் மண்டபம நிறைந்த ஜனங்கள் கண்டு களிக்கும்
சிவாஜி கணேசன் - சாவித்திரி - முத்துராமன்
தேவிகா - கே. பி. சுந்தராம்பாள்
டி. ஆர். மஹாலிங்கம்



ஆகியோர் நடித்த
திருவிளையாடல் (ஈஸ்மன் கலர்)
இப்பொழுது ஓடிக்கொண்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று இங்கு வரும் அமைச்சர்கள், எம்.பி.க்கள் சிலர்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

யாக்கப்பட்டார். இப்பதவியில் அவர் 1956 வரை இருந்தார். பள்ளிக்கூடங்களில் தாய் மொழி மூலக் கல்விக்கு இவரே பொறுப்பாயிருந்தார். 1956ல் தேர்ந்தெடுக்கப்பட்ட எட்டு யு. என். பி. எம். பி.க்களில் இவரும் ஒருவராவர். 1960 மார்ச் தேர்தலில் புதிய ஹிங்கிராங்கெட்ட தொகுதியில் போட்டியிட்டு வென்றார். அப்பொழுதும் அவருக்கு மந்திரிப்பதவி கிடைத்தது. ஜுலையிலும் அவர் வெற்றி பெற்றார்.

1965 மார்ச் தேர்தலில் பொல்காவலைத் தொகுதியில் போட்டியிட்டு 745 அதிகப்படி வாக்குகளால் வெற்றி பெற்றார்.

**திரு. அலெக்ஸாண்டர் பெயார்லி விஜயமானே**

தேசிய அரசாங்கத்தில் நீதிமந்திரிப் பதவி வகிப்பவர்.

இவர் 1963ல் செனேட் சபைக்குத் தெரிவுசெய்யப்பட்டார். 1969ல் அவரது அங்கத்துவக் காலம் முடிவடையும்.

இங்கிலாந்தில் சட்டப் படிப்புப் பயின்று தேறி இலங்கைக்கு வந்த இவர், முதலில் மாத்தறையில் சில காலத்துக்கும், பின்னர் கொழும்பிலும் வழக்கறிஞராகக் கடமையாற்றிவந்தார்.

வாழ்க்கையில் முன்னதாகவே அரசியலில் ஈடுபாடு கொண்ட இவர், இலங்கை தேசிய காங்கிரஸில் சேர்ந்திருந்தார். பின்னர், இது



ஏ. எவ். விஜயமன்ன

கைவிடப்பட்டதும் யூ. என். பி.யில் சேர்ந்தார்.

மார்ச், 1960ல் தெஹியோவிற்ற தொகுதியில் போட்டியிட்டு 546 வாக்குகளால் தோல்வியுற்றார். அதே வருடம் ஜுலையில் 603 வாக்குகளால் தோல்வியுற்றார். இரு தடவைகளும் குறைந்த வாக்குகளால் தோற்கடிக்கப்பட்ட துரதிருஷ்டசாலியான இவர், பின்னர் செனேட்சபைக்கு நியமனம் பெற்றார்.

⁂ ⁂ ⁂

**திரு. துவரபக்ஸ ஹெவாயலாகே அசோகா மஹாநாம கருணரத்ன**

தேசிய அரசாங்கத்தில் சமூக சேவை மந்திரிப்பதவி வகிக்கிறார். இவர் சி.பி.டி. சில்வாவின் புதிய ஸ்ரீலங்கா சுதந்திர சோஷலிசக் கட்சி அங்கத்தவர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவரான இவர், ரம்புக்கணை பட்டின சபைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டு, 1953ல் அதன் தலைவரானார்.

1958ல் அவர் பாராளுமன்றத்தில் ஓர் நியமன அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டார். முதன் முதலாக

(9-ம் பக்கம் பார்க்க)


யாழ்ப்பாண மக்களுக்கு ஓர் நற்செய்தி!

உங்கள் கைக்கடிகாரம்—சுவர்க்கடிகாரம் சரியான நேரம் காட்டவில்லையா?
உடனடியாக எடுத்து வாருங்கள்
ரதி வாச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ் ஸ்தாபனத்தாரிடம்
நவீன யந்திரங்களைக் கொண்டு கைதேர்ந்த தொழிலாளர்களால்
திருத்தித் தரப்படும்.

ஓர் புத்தம் புதிய றலி சைக்கிளும்
அதற்கான உப உறுப்புகளும் வேண்டுமா?
அழகான — உயர்தரமான கைக்கடிகாரம் — சுவர்க்கடிகாரம் வேண்டுமா?

விஜயம் செய்யுங்கள்!

ரதி வாச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ்
44, 46, கஸ்தூரியார் வீதி, — யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7103



ஐக்கியத்தை உருவாக்கும்
எமது பிரதமரை கரங்கூப்பி
வரவேற்கின்றோம்!

எங்களிடம்
சகல விதமான சாய்ப்புச்சாமான்களும்
பெண்களுக்குத் தேவையான முடிமயிர் வகைகளும்
மற்றும்
சயிக்கிள், கைக்கடிகாரம்,
பேனுக்கள், பற்றறி வகைகள்
முதலியனவும்
மலிவான விலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

சிவாஸ்கோ
(உரிமையாளர்: துரை சுப்பிரமணியசிவம்)
196, ஆஸ்பத்திரி வீதி, — யாழ்ப்பாணம்.



தங்க, வைர, நகைகளுக்கு
சிறந்த இடம்



லலிதா நகை மாளிகை
99—101, செட்டியார் தெரு, கொழும்பு
தொலைபேசி: 3610



சிறந்தது!! சிக்கனமானது!! சிந்தனையூட்டுவது!!
நீங்கள் சோம்பலின்றித் துரிதமுடன் செயலாற்ற
எப்போதும் எந்நேரமும் உகந்த பீடி




யானை பீடி
100 க்கு 100 இலங்கையரைக் கொண்டு
உள்நாட்டுக் கைத்தொழிலை ஊக்குவிக்கும்பொருட்டு சிறந்த முறையில் தயார் செய்யப்படுவது
யானை பீடி
பாட்டாளி முதல்
பணக்காரர் வரை
புகைத்து மகிழ்வது
யானை பீடி ஒன்றே

உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்க இன்றே புகைத்துப் பலனடையுங்கள்
தயாரிப்பாளர்கள்:
யானை பீடிக் கம்பெனி
130, ஆட்டுப்பட்டித் தெரு, — கொழும்பு - 13
தொலைபேசி: 7651






சித்திராவின்
சித்தி
திரைக்கதை-வசனம்—டைரெக்ஷன்
கே. எஸ். கோபாலகிருஷ்ணன்
பத்மினி - ஜெமினிகணேஷன், - எம். ஆர். ராதா
முத்துராமன் - விஜயநிர்மலா - நாகேஷ் - விஜயஸ்ரீ
மற்றும் பலர் நடித்தது
சென்ட்ரல் (மருதானை) ஈரோஸ் (பாமன்கடை)
ராணி (யாழ்ப்பாணம்)
மற்றும் சிலோன் எண்டர்டெயின்மன்ஸ் திரைகளில்
2 - வது வாரமாக வெற்றி நடை போடுகின்றாள்!
'ஆசைக்கா வாழாமல் கடமைக்காக வாழ்பவள்தான் பெண்' என்ற உயர்ந்த தத்துவத்தை உருக்கமுடன் உணர்த்தும் உன்னதத் திரையோவியம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று இங்கு வரும் அமைச்சர்கள், எம். பி. க்களிற் சிலர்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)


நியமிக்கப்பட்ட சிங்கள நியூ மன அங்கத்தவர் இவரே. மார்ச் 1960ல் இவர் ரம்புக்கணைத் தொகுதிக்கு சுதந்திரக்கட்சி அபேட்சகராகப் போட்டியிட்டு 6284 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெற்ருர். ஜூலை 1960ல் அதே தொகுதி எம். பி. யாஞர். 1960ல் அவர் நீதி மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசியாகத் திருமதி பண்டாரநாயகாவினல் நியமிக்கப்பட்டார். 1963ல் அவர் அப்பதவியை ராஜினமாச் செய்துவிட்டு எதிர்க்கட்சியில் சேர்ந்தார்.



எம். எச். முகமது

பாலும் இடதுசாரித் தொகுதியாக விளங்கிய இத்தொகுதியை வலதுசாரித் தொகுதியாக்கியது அவருக்குப் பெருமை அளிக்கும் சாதனையாகும். அநேகமாகத் தொழிலாளர் வர்க்கத்தைக் கொண்டுள்ள பொரளைத் தொகுதியில் 67.2 சதவீதம் சிங்களவரும், 10 சதவீதமும் தமிழரும், 4.7 சதவீதம் முஸ்லிம்களும் உள்ளனர்.

இத்தொகுதி எம். பி. யாக இருந்த திருமதி விவியன் குணவர்த்தனவுக்கும் திரு. முகம்மதுவுக்கும் சென்ற தேர்தலில் கடும் போட்டி நடந்தது. ஆனலும் திரு. முகம்மது 1682 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெற்ருர்.



அசோகா கருணரத்ன

பின்னர், திரு சி. பி. டி. சில்வாவுடன் சேர்ந்து புதிய கட்சியை உருவாக்கினர். அக்கட்சி அபேட்சகராகக் கடந்த தேர்தலில் ரம்புக்கணைத் தொகுதியில் போட்டியிட்டு வென்ருர்.

திரு. முகம்மது ஹனீபா முகம்மது

தேசிய அரசாங்கத்தில் தொழில், வீடமைப்பு மந்திரியாக இருக்கிருர். இவர் 1959ல் கொழும்பின் முதல் முஸ்லிம் மேயராகத் தெரிவு செய்யப்பட்டார்.

வர்த்தகத்தில் ஈடுபட்ட இவர், கொழும்பு முனிசிபல் அரசியலில் 1948ல் இறங்கினர். 1959ல் மேயராஞர். முனிசிபல் சபை தூது கோஷ்டி அங்கத்தவராகக் இந்தியா, பர்மா சென்றிருக்கிருர்.

1955ல் இவர் பொரளைத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ருர்.

இதற்கிடையில், இலங்கை - இந்திய காங்கிரஸ் இலங்கை ஜனநாயக காங்கிரஸாக மாறியது.

மார்ச் 1960ல் இலங்கை ஜனநாயக காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட திரு. தொண்டமான் தோல்வியுற்ருர். ஜூலை தேர்தலில் அவர் போட்டியிடாவிட்டாலும், திருமதி பண்டாரநாயக்காவை ஆதரித்தார்.

1964ல் திருமதி பண்டாரநாயக்காவின் சிம்மாசனப் பிரசங்கத்தின் மீதான வாக்கெடுப்பில் திரு தொண்டமான் வாக்களிக்காததன் காரணமாக, அவருடைய ஒரு வாக்கின் வித்தியாசத்தில் திருமதி பண்டாரநாயக்காவின் அரசாங்கம் வீழ்ந்தது. தொடர்ந்து நடைபெற்ற தேர்தலில் அவர் யு. என். பி. யை ஆதரித்தார். இவரும் ஜனநாயக காங்கிரஸின் மற்றுமோர் அங்கத்தவரான திரு. அஸீஸும் நியமன அங்கத்தவர்களாக்கப்பட்டனர்.

ஜெனிவா சர்வதேசத் தொழிற்சங்க மகாநாடுகள் பலவற்றுக்கு இவர் சென்றிருக்கிருர்.

திரு. சௌமியமூர்த்தி தொண்டமான்

தேயிலைத் தோட்டச் செல்வந்தரும், தோட்டத் தொழிலாளரின் தொழிற்சங்கங்களில் வாய்ந்த தொழிற்சங்கம் ஒன்றின் தலைவருமாவர் இலங்கை - இந்தியர் காங்கிரஸின் தலைவராக 1947 பொதுத் தேர்தலில் நுவரெலியாத் தொகுதியில் போட்டியிட்டு 6,135 பெரும்பான்மை வாக்குகளில் வெற்றி பெற்ருர்.

இலங்கையில் முதலாவது பாராளுமன்றம் பின்னர் நிறைவேற்றிய பிரஜா உரிமைச் சட்டத்தின் பலனாக 1952 தேர்தலில் திரு. தொண்டமானே அல்லது இலங்கை - இந்திய காங்கிரஸின் வேறெந்த அங்கத்தவரோ போட்டியிடவில்லை.

திரு. வேலு அண்ணாமலை

ஓர் நியமன அங்கத்தவர் ஆவார். இவர் ஜனநாயக காங்கிரஸின் நிதிக் காரியதரிசியாவார்.

இவர் தோட்டத்தில் உத்தியோகம் பார்த்தவர். தமது தோட்ட உத்தியோகத்தர் சங்கத்தில் தலைவராகவும், அகில இலங்கைத் தோட்ட உத்தியோகத்தர் சங்கத்தின் உப தலைவராகவும் இருந்திருக்கிருர். கம்பளை கால்நடைப் பண்ணைச் சங்கத்தில் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

இலங்கை ஜனநாயக காங்கிரஸின் தலைமை உத்தியோகத்தர்களில் இவரும் ஒருவர். 1954லிருந்து கம்பளை மாவட்டத் தலைவராக இருந்து வருவதுடன், செயற்குழு அங்கத்தவராகவும், நிதிக் காரியதரிசி, பொதுக்காரியதரிசி, மத்திய சபை உபதலைவர் ஆகிய பதவிகளிலும் இருந்து வந்திருக்கிருர்.

கலியாட்டியில் அக்கறையுள்ள இவர், யூனியன் பசுவராஜ தந்தப்பந்தாட்டச் சங்கத்தின் போஷகராவார்.

திரு. ரணசிங்க பிரேமதாஸ

தேசிய அரசாங்கத்தில் உள்ளூராட்சி அமைச்சின் பாராளுமன்றக் காரியதரிசியாவர். இவர் கொழும்பு மத்திய தொகுதி இரண்டாவது அங்கத்தவர். சரளமாகச் சிங்களம் பேசும் பேச்சாளர்களில் ஒருவராகக் கருதப்படுகிருர்.

மார்ச் 1960ல் கொழும்பு மத்திய தொகுதியில் மூன்றாவது அங்கத்தவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர் ஜூலை பொதுத் தேர்தலில் தோல்வியுற்ருர்.

இவர் அரசியல் வாழ்வை ஆரம்பிக்கும் போது இலங்கைத் தொழிற்கட்சி அங்கத்தவராக இருந்தார். பின்னர் யூ என் பியில் சேர்ந்த இவர் இன்று அதன் தீவிர தொழிற்சங்க ஊழியர்களில் ஒருவராகப் பணியாற்றி வருகிருர்.

முதல் முறையாக 1950ல் கொழும்பு முனிசிப்பல் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர் 1955ல் உதவி மேயராகத் தெரிவுசெய்யப்பட்டார். 1959ல் முனிசிப்பல் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டார்.

அரசியலுடன் சமூகநலத் தொண்டையும் இணைத்துள்ள திரு. பிரேமதாஸ, கொழும்பு மக்களுக்குப் பல இலவசப் பள்ளிக்கூடங்களையும், தையல் நிலையங்களையும் அளித்துள்ளார். 1965ல் இவர் மேற்கு ஜெர்மனி, இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி ஆகிய நாடுகளுக்கு விஜயஞ்செய்து அங்குள்ள உள்ளூராட்சி மன்றங்களைப் பார்வையிட்டார்.

ஃ ஃ ஃ

திரு. ஸி. நந்தா மத்தியூ

ஜனப்பிரதிநிதிகள் சபையின மிகக் குறைந்த வயதான எம்பியாவர். இவரது வயது 26 ஆகும். சட்டக் கல்லூரியில் பயின்று வந்த இவரது படிப்பு, பாராளுமன்றக் கலைப்பினலும் அதைத் தொடர்ந்து மார்ச் 1965ல் வந்த பொதுத்தேர்தலாலும் குழம்பியது. இவரை யூ என் பி தெஹிவளை தொகுதி அபேட்சகராக நிறுத்தியது. அவர் வெற்றியும்பெற்ருர்.

திரு. மத்தியூ, கடைசிப் பாராளுமன்றத்தில் கொலன்ன எம்பியாக இருந்த திரு. சிரில் மத்தியூவின் மகனுவார். தந்தை கொலன்ன தொகுதியை மகனுக்கு விட்டுக் கொடுத்துவிட்டுத் தான் பண்டாரவளைத் தொகுதியில் போட்டியிட்டார். தந்தை தோல்வியுற்ருர். மகனுே வென்ருர்.

தந்தையைப் போல இவரும் பாராளுமன்றத்தில் மந்திரிகளை அதிக கேள்விகள் கேட்கும் பழக்கத்தில் ஏற்கனவே பெயர் பெற்றுவிட்டார்.

ஃ ஃ ஃ

திரு. டிங்கிரி பண்டா வெலகெதர

தேசிய அரசாங்கத்தில் தேசியமய சேவை அமைச்சின் பாராளுமன்றக் காரியதரிசியாவர். இவர் 1961ம் வருடம் தொடக்கம் குருணைகல் மேயராக இருக்கிருர்.

இவர் 1940ல் காரியாதிகாரியாக நியமனம் பெற்றுப் பல இடங்களிலும் சேவையாற்றியப் பின் அரசியலுக்காகத் தம் பதவியைத் துறந்தார். 1952ல் யு என் பி அபேட்சகராக இவர் போட்டியிட்டு 4,500 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெற்ருர். 1954ல் இந்தியா சென்ற பாராளுமன்ற நல்லெண்ணத் தூதுகோஷ்டியில் இவரும் ஓர் அங்கத்தவர். அதே வருடத்தில் காமன் வெல்த் பாராளுமன்றச் சங்கத்தின் மகாநாட்டுக்கு இலங்கைத் தூதுகோஷ்டியின் அங்கத்தவராகக் கென்யாவுக்குச் சென்ருர்.

பிறகு 10 வருடங்களுக்கு அவருக்கும் பாராளுமன்ற ஆசனம் கிடைக்கவில்லை. குருணைகல், பொல்கஹவெல ஆகிய இரு இடங்களிலும் போட்டியிட்டுத் தோல்வியுற்ருர். 1961ல் அவர் குருணைகல் மேயராஞர். மார்ச் 1965ல் குருணைகல் தொகுதிக்கு யூ. என். பி. அபேட்சகராகப் போட்டியிட்டு வெற்றிபெற்ருர்.

அவர் பௌத்த சமய நடவடிக்கைகளிலும், கூட்டுறவு வேலைகளிலும் அதிக ஈடுபாட்டுடன் பணியாற்றி வருகிருர். பல சங்கங்களுக்குத் தலைவராக இருக்கிருர்.

திரு. சைமன் அபேவிக்கிரம

தேசிய அரசாங்கத்தில் உள்நாட்டு அமைச்சின் பாராளுமன்றக் காரியதரிசியும், பதுளை மேயருமாவர். ஊவா மாகாணத்தின் பிரதம பஸ் சொந்தக்காரரில் ஒருவராக இருந்தவர் இவர். இப்பொழுதுப் வர்த்தகராகவும், தோட்டச் சொந்தக்காரராகவும் இருக்கிருர்.

உள்ளூராட்சி அரசியலில் தமது 18ம் வயதில் நுழைந்த இவர் பசர கிராமச் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் தொடர்ந்து 15 வருடங்களாக அதன் தலைவராகப் பணியாற்றினர். இவர் பதுளை நகரசபையின் அங்கத்தவராக ஆறு வருடங்களும், அதன் தலைவராக மூன்று வருடங்களும் இருந்தார்.

1942ல் இவர் பிபிலியில் நடைபெற்ற உபதேர்தலில் திருமதி குசுமா குணவர்த்தன ஆனல் தேர்தல் ஆட்சேபனை மனு ஒன்றின் மூலம் தமது ஆசனத்தை இழந்தார். 1952-ல்

(10-ம் பக்கம் பார்க்க)


திறமையான கலர்

அச்சடிப்பதற்கும்

உறைப்பெட்டிகள் ★

தயாரிப்பதற்கும்

தொடர்பு கொள்க:

கே. ஜி. இன்டஸ்ரீஸ்

543, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை,

கொழும்பு 10.

டெலிபோன்: 2668, 4228






"ராஜா ஸ்ரோர்ஸ்"

இன்றே விஜயம் செய்யுங்கள் மலிவான விலையில்

பழச்சத்துக்கள், நெற்குத்தும், மாவரைக்கும் இயந்திரங்கள், அதன் உபகரணங்கள், விளையாட்டுச் சாமான்கள், பவுடர் தினிசுகள், சோப்தினிசுகள், வாசனைத்திரவியங்கள், சாய்ப்புச் சாமான்கள்

தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

67, 69, கஸ்தூரியார் வீதி,

போன்: 372 தபால்பெட்டி: 64 தந்தி: ராஜா

யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று இங்கு வரும் அமைச்சர்கள், எம். பி.க்கள் சிலர்

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

யூ.என்.பி. அபேட்சகராக பதுளை இரட்டை அங்கத்த வர் தொகுதிக்குப் போட்டி யிட்டு இரண்டாவது எம். பி யாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். 1956 லும் பதுளை எம்.பி.யாகத் தேர்தெடுக் கப்பட்டார். புதிதாக வகுக் கப்பட்ட பசர தொகுதியில் மார்ச், 1960ல் வெற்றி பெற்றபோதும், ஜூலையில் தோல்வியுற்ருர.

மார்ச் 1965-ல் பசர தொகுதிக்குப்போட்டியிட்டு 828 பெரும்பான்மைவாக்கு களால் வெற்றிபெற்ருர்.

## திரு. முகம்மது ஹனீபா மரிக்கார் முகம்மது நைனு மரிக்கார்

தேசிய அரசாங்கத்தின் நிதி அமைச்சின் பாராளுமன்றக் காரியதரிசியாவர்.

இவர் ஓர் வழக்கறிஞரும், சட்ட ஆசிரியருமாவர். அவ ரது பதவிக்கு முற்றிலும் தகுதியானவர். இவர் இங்கி லாந்தில் பயிற்சிபெற்ற பாரிஸ்டராவர்.

இவர் இங்கிலாந்திலும், ஐரோப்பாக் கண்டத்திலும் பரவலாகப் பிரயாணம் செய்தவர்.

இவர் மார்ச், 1960ல் புத் தளம் தொகுதிக்கு யூ என். பி. அபேட்சகராகப்போட்டி யிட்டு 4349 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெற் ருர். அதே வருடம் ஜூலை யிலும் அவர் வெற்றிபெற் ருர்.

மார்ச், 1965ல் அவர் அதே தொகுதியில் 7500 பெரும்பான்மை வாக்குக ளால் வெற்றிபெற்ருர்.

ஃ ஃ ஃ

## திரு. மீராலெப்பபொடி வன்னிய முகம்மது முஸ்தபா

தேசிய அரசாங்க சமூக சேவை அமைச்சின் பாராளு மன்றக் காரியதரிசியாவர். இவர் மட்டக்களப்பில் புறக்டர், நொத்தாரிசாகக் கடமை செய்பவர்.

தமது 28வது வயதில், திரு. முஸ்தபா பொத்துவில் தொகுதியில் சுயேச்சை அபேட்சகராகப் போட்டி யிட்டுத் தோல்வியுற்ருர். 1956ல் அதே தொகுதியில் தமிழரசுக்கட்சி அபேட்சக ராகப் போட்டியிட்டுவென் ருர். 1959ல் அவர் தமிழர சுக் கட்சியை விட்டுவிலகி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி யைச் சேர்ந்தபோது, திரு. பண்டாரநாயகா அவரை நிதி அமைச்சின் பாராளு மன்றக்காரியதரிசியாக நிய மித்தார் அதே வருடம் செப்டம்பர்மாதம் நிதி மந் திரி திரு. ஸ்டான்லி டி. சொய்ஸா தமது பதவியை ராஜினமாச் செய்தபோது அவர் திரு. தகநாயகாவால் நிதிமந்திரியாக்கப்பட்டார். நவம்பர் 23, 1959லிருந்து மார்ச் 20, 1960வரை அவர் அப்பதவியை வகித்தார்.

மார்ச், 1960ல் நிந்தாவூர் தொகுதியில் போட்டியிட் டுத் தோல்வியுற்ருர். அச்சம யம் அவர் திரு. தகநாயகா வின் எல். பி. பி- அபேட்சக ராகப் போட்டியிட்டார். மார்ச், 1965ல் அதே தொகு திக்கு யூ.என்.பி அபேட்சக ராகப்போட்டியிட்டுவெற்றி பெற்ருர்.

## திரு. கணபதிப்பிள்ளை வில்லியம் தேவநாயகம்

கல்குடாத் தொகுதிக்கு யூ என்.பி. அபேட்சகராகக் கடந்த தேர்தலில் போட் டியிட்டு வென்றவர். இவர் சென்ற 25 வருடங்களாக மட்டக்களப்பில் புரக்டர் நொத்தாரிசாகக் கடமை யாற்றி வருகிருர்,

முதன் முதலாக 1947ல் சுயேச்சை அபேட்சகராக இவர் கல்குடாத் தொகுதி யில் போட்டியிட்டுத்தோல் வியுற்ருர். அதன் பிறகு அவர் அரசியலையேகைவிட்டு விட்டு இருந்தார். பிறகு, மார்ச், 1965ல் யூ.என்.பி. அபேட்சகராகப் போட்டி யிடத் தீர்மானித்து, 470 பெரும்பான்மை வாக்குக ளால் வெற்றியும் பெற்ருர். கிழக்கு மாகாணம் தேர் தெடுத்த மூன்று யூ.என்.பி அங்கத்தவர்களில் இவரும் ஒருவர்.

திரு.தேவநாயகம் விவசா யத்தில்அதிக ஈடுபாடுஉடை யவர். விவசாய மத்திய சபையில் இவரும்ஓர் அங் கத்தவர்.

இவர் ஓர் தலைசிறந்த கூட் டுறவாளருங்கூட. மட்டக்க ளப்புக் கூட்டுறவு, பலநோக் கச் சங்கத்தின் தலைவரும், அகில இலங்கை கூட்டுறவு சம்மேளனத்தின் உபதலை வருமாவர்.

# நீதியின்வழியில் நிற்போய் வருக!

(5-ம் பக்கத்தொடர்ச்சி)

புத்தரின் அன்புக் கொள்கை
புத்தொளி பூக்க தூய
சத்தியம் ஓங்கிச் சாந்தி
சமத்துவம் மிளிர என்றும்
இத்தரை வாழ்வோர் எல்லாம்
இனமதப் பூசல் இன்றி
நித்தியம் இனிமை காண
நீவழி செய்தாய் வாழி!

நேரியல் நெஞ்சம் கொண்ட
நிகரிலாத் தலைவ! நின்றன்
கூரியல் மதியால் மக்கள்
கூடினர் உன்னால் என்றும்
சீரியல் பெருகிச் செம்மை
சிறந்திடத் தேச மெங்கும்
பாரிய பயனே ஓங்கிப்
பணிபல செய்வோன் நீயே!

தலைவ நீ! வருக நாட்டில்
தமிழ்மொழி பேசு வோர்கள்
நிலைபெறப் பேத மற்ற
நெறியினுல் நேர்மை பேணி
உலகிடை ஈழம் உன்னுல்
உயர்ந்தது எனும்பேர் தாங்கி
இலகிட இறைவன் ஆசி
என்றுமுன் பாலுண் டாமே!

வேறு:

எல்லோர் வாழ்வும் இன்புற்றிங்கு
இலங்கி ஏற்றம் இசைந்திடவும்
வல்லோர் தம்மை மதித்தவரின்
மதியைப் பாய்ச்சி வளங்காட்டி
பல்லோர் வாழச் சில்லோரின்
பகைமை போக்கி கடமைசெயும்
நல்லோய் நாடு நலங்காண
நாளும் கடமை நனிசெய்வாய்!

சனநா யகத்தின் தந்தையெனத்
தரணி போற்றும் தகைமையுள
செனநா யகரே! புத்தர்பிரான்
சீலம் பேணும் திருமகனே!
உனைநாம் உள்ளத் துவகையுடன்
ஒருமை ஓங்க வரவேற்ருேம்
குணநா யகத்தால் இந்நாடு
கொழிக்கச் செய்தோய் வாழியவே!

# தேசீய சிற்பி

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

த்துள்ளார். நாட்டிலே ஒற்றுமையை ஏற்படு த்தி, இந்நாட்டில் வாழ் கின்ற சிறுபான்மையினரும் இந்நாட்டுப் பிரஜைகள் தான் என்பதை எடுத்துக் கூறி எத்துறைகளிலேனும் அவர்களுக்கும் சமபங்குண் டென்பதை வலியுறுத்தி ஜனநாயக ரீதியிலே ஆட்சிப் பொறுப்பை மேற்கொள்வ தற்குத் துணிபுகொண்ட முதல் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா அவர்களே யென்பதைத் தமிழ் மக்கள் உணர்ந்து திருப்திகொண் டுள்ள நேரத்தில் அவரது யாழ். நகர் விஜயம் அவர் களுக்கு மேலும் நம்பிக் கையையூட்டும் என்பதில் ஐயமில்லை. கௌரவ சேன நாயக்கா அவர்களது யாழ். நகர் விஜயமானது யாழ்ப் பாணத்தின் சரித்திரத்தி லேயே மிகமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும்.

கடந்த ஆண்டுகளில் நாட் டினை ஆண்ட அரசாங்கத் தின் தலைவரெவராவது அவ் வாட்சியின் கீழுள்ள குடிமக் களின் ஒரு பகுதியைச் சந் திக்காமல் மிகக் கீழ்த்தர மான முறையிலே பெரும் பான்மைச் சமுதாயத்திற் கும் சிறுபான்மைச் சமுதா யத்திற்குமிடையில் வேற்று மையை ஏற்படுத்தி, இனக் கிளர்ச்சிகளை மேற்படுத்திச் சர்வாதிகாரம் அதன் உச்ச நிலையை அடையும் கட்டத் திலேயே, பிரதமர் டட்லி சேனநாயக்கா அவர்கள் தேசிய அரசாங்கத்தை உரு வாக்கி இந்நாட்டுச் சிறு பான்மைமக்களுக்குத் தென் பையூட்டி, எனது ஆட்சி யின்கீழ் நீங்கள் சீருடனும் சிறப்புடனும் வாழ்வீர்கள், என்னும் உறுதி மொழியை அளித்துள்ளார். இதற்கு தமிழ்மக்கள் அனைவரும் அவ ருக்கு கடமைப்பட்டுள்ளார் கள்.

சிறுபான்மையினத்தின் ஒற்றுமையும், ஒத்துழைப் பும் நாட்டின்பொருளாதார அபிவிருத்திக்கு மிக இன்றி யமையாததொன்றென்ப தைத் திரு. டட்லி சேனநா யக்கா அவர்கள் உணர்ந்து கொண்டார். வேறெந்த அரசாங்கத்தின் தலைவரா வது கடந்த பல ஆண்டுக ளாகச் சாதிக்கமுடியாத ஒன் றைச் சாதித்த பெருமை திரு. சேனநாயக்கா அவர் களையே சாரும்.

ஆகவே நாட்டின் ஒற்று மைக்கு வித்திட்ட முதல் தலைவர் என்ற வகையிலே, ஜனநாயக முறையிலே இந் நாட்டில் தேசிய அரசாங் கத்தை உருவாக்கி எல்லாச் சமுகங்களையும் ஒன்றுசேர் த்து தேசிய ஒற்றுமையை ஏற்படுத்திய முதல் பிரதமர் என்ற வகையிலே நாட்டின் சரித்திரத்திலே அவர்பெயர் மங்காப்புகழ் பெற்றுள் ளது. அவரது யாழ். நகர் விஜயம் தமிழ் மக்களி டையே அரசியல் குரோத த்தை நீக்கி அவர்களின் ஒத்துழைப்பை ... செய்யவேண்டும்.


# V. T. R.
## லிங்கன் ஸ்பெஷல் பீடிகள்

தரத்தில் தன்னிகர் அற்றவை.
குணத்தால்நிறைந்தவை. குன்ருப்புகழ்பெற்றவை.

- சோர்வடைந்த உள்ளத்தில் உற்சாகமூட்டவல்லது
- சோம்பலை அகற்றி சுறுசுறுப்பூட்டவல்லது
- சிந்தனையாளரின் சிந்தனைக்கு திறவுகோலானவை
- சுவைப்போர்க்கு தெவிட்டாச் சுவையளிப்பவை

எமது
**V. T. R. லிங்கன் ஸ்பெஷல் பீடிகளே**

தேவைக்கு
V. T. இராசலிங்கம்
லிங்கன் பீடி பக்டெறி
மேற்கு, கோண்டாவில்.

சோல் ஏஜன்ட்:
கோ. க ஆ. க.
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சிவசக்தி ஸ்ரோஸ்
103/3, சிவன்கோயில் வடக்கு வீதி, யாழ்ப்பாணம்.



## 5-ம் பதிப்பு விற்பனையாகிறது

உலகத்தில் நீங்கள் உயர் பதவி அடையவேண்டுமா?
சகல வசிய மர்மங்களை நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டுமா?
நினைத்த காரியத்தை சாதிக்கவேண்டுமா?

இவற்றை எப்படி அடைவது?

# ★ ஹிப்நாடிஸம் ★
என்னும்
## மெஸ்மெரிச - மனோவசியக்கலை

ஆசிரியர்: உலகப் புகழ் - மெஸமெரிச நிபுணர்
"சூர்யகாந்"

இதில், தாம் கோரிய பெண்ணை மணமுடித்தல், மணமகன் மணமகளுடைய காதலை விருத்திசெய்தல், மனமில்லாத மணத்தை மகிழ்வுபெறச் செய்தல், பிரி வுற்ற தம்பதிகள் கூடுதல், வேண்டுமளவு சந்ததி பெறல், கணவனின் கெட்ட நடத்தைகளைத் திருத்து தல், பெண்களின் துர்நடத்தைகளை நிறுத்துதல், பேய் பிசாசுகளை ஓட்டுதல், பில்லி சூனியம் திருப்புதல், பைத் தியம் போக்கடித்தல் - கூடுவிட்டுக் கூடுபாய்தல்-குடிக் கும் தண்ணீரில் வசியம் - வசிய மை - வியாபாரத்தில் மெஸ்மெரிஸம்-விவகாரங்களில்வெற்றி பெறல்-நோயா ளிகளைக் குணப்படுத்தல் - பிறர் கண்களுக்குத் தெரியா மல் உலாவும் வழிவகைகள் - இறந்தவர்களுடன் எப்ப டிப் பேசுவது? ஆகியவைகள் எளியநடையில் யாவரும் புரிந்து, நன்கு அறிந்துகொள்ளும்படியாக இனிய மொழியில் எழுதப்பட்டுள்ளது. விலை ரூபா 4-25.

நவலட்சுமி புத்தகசாலை
136, செட்டியார்தெரு, கொழும்பு -11.



உங்கள் கூந்தலைப் பாதுகாருங்கள்
# லோட்டஸ்




நறுமணமூட்டப்பட்ட
கிங்
கோக்கனட்
ஓயில்
கெஸ்டர்
ஓயில்

இவைகளைப்பாவித்து
இந்த
லோட்டஸ
ஓயில்கள்

கூந்தலை வளரச்
செய்வதோடு
இளமையில் நரை
விழுவதைதடுக்கிறது.

கௌரி டிரேடிங் கம்பெனி
6, 3-ம் குறுக்குத் தெரு, கொழும்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரிய, இனிய தலைவர்

எல்லா மனிதரும் பிழை செய்வது சகஜம் தானே. முக்கியமான விஷயம் என்னவென்றால் பிழை செய்யும் போதும் அவருக்கு சுயநலமென்பது கிடையாது. முன்பு ஒரு சமயம் தமது மனச் சாட்சிக்கு விரோதமாக சில விஷயங்களை செய்ய வேண்டி நேரிட்ட போது அவர் தமது பிரதம மந்திரி பதவியை துறந்தவர். அவர் திறமை சாலியும் கூட, பிறர் நம்பும் வண்ணம் பேசுபவர். நிர்வாக ஆற்றல் படைத்தவர் அவரிடத்தில் பெருமை கிடையாது. இதமான சால்புகள் அவரிடம் இருக்கின்றன. இணக்கமாக நடந்து எளிமையாக வாழ்பவர். பெருமைமிக்க தம் பெற்றோரிடமிருந்து இனிமையான குணாதிசயங்களை வாரிசாகப் பெற்றவர்.

இந்தப் புதல்வரைப் பார்க்கும் பொழுது. நாட்டுக்குப் பேருதவி புரிந்த இவரது அருமைத் தந்தையையும் தாயையும் நினைவு கூருகின்றோம். சிங்கள மக்களினது உயர்ந்த பண்புகளையும் புத்தபிரானின் மதத்தின் புனிதத் தன்மையையும் இவரில் காண்கின்றோம்.

தனது சொந்த நலன் கருதி அதிகாரத்தைப் பிரயோகிக்காத ஒரு அபூர்வ மனிதனை இலங்கை கொண்டுள்ளது. நாட்டுக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய காரியங்கள் எதனையும் தாம் செய்ய வேண்டியிருக்குமானால் தாம் தமது பதவியிலிருந்து ராஜினாமா செய்து விடுவதாக இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தெரிவித்திருந்ததாக இந்தியப் பத்திரிகைகளில் சில தினங்களுக்கு முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தன. இதே போன்ற கருத்துக்களையே நமது பிரதமர் திரு. டட்லி

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சேனநாயக்காவும் கொண்டிருக்கிறார். இப்படியான ஒருவர் நமது நாட்டுக்கு பெரும் சொத்து இதன் பெறுமை கணக்கிட முடியாது.

இலங்கையில் வாழும் பல்வேறு இன மத மக்களிடையே தேசிய சௌஜன்யமும் ஐக்கியமும் வளர்ந்து வருவதற்கு இவர் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு இலங்கை வாழ் மக்கள் எல்லோரும் அளவிட முடியாத கடமைப்பட்டவர்கள் நாட்டில் அமைதி இன்மையையும் இன, மத பேதத்தையும் நீக்குவதற்கு படிப்படியாக இவர் எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு மக்கள் நன்றி செலுத்தவேண்டும்.

தகுதியுடையவர்களைக் கணிக்கும் தகமை தமிழர்களிடையே மிகவும் உண்டு. நெருக்கடியான சூழ்நிலையிலும் இவ்விதசேவையளிக்க முன்வரும் சிங்களத் தலைவரின் பெருமை போற்ற வேண்டியதே. இந்த வரிசையில் கௌரவப் பிரதமர் டட்லி சேனநாயகா, திரு. வில்மட் பெரேரா ஆகிய தலைவர்கள் சேர்க்கப்பட வேண்டியவர்கள்.

நாட்டில் தேசிய சௌஜன்யத்தையும் நிலையாக உருவாக்குவதற்கு இன்னும் பல சேவைகளாற்றவேண்டியிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. பல இன்னல்களுக்கிடையே திரு. டட்லி சேனநாயகா தொடங்கியுள்ள இந்த நல்ல செயல் வெற்றிகரமாகப் பூர்த்திபெறவேண்டுமென்று நம்பிக்கையுடன் பிரார்த்திப்போமாக.

இந்த நாட்டில் சிங்களவருக்கும் தமிழருக்குமிடையே நல்லுறவை ஏற்படுத்திய பெருமை திரு. டட்லி சேனநாயகாவையே பெருமளவில் சாரும். இதற்கான நல்ல சூழ்நிலையை உருவாக்கியவரும் அவரே. இவ்வித நல்ல முயற்சிக்கு பாராளுமன்றத்திலுள்ள அரசியல் கட்சிகளின் தற்போதைய பெரும்பான்மைப்பலம் ஒரு காரணமென்று கூறலாம், சூழ்நிலைக்கேற்ற வகையில் தமது நிலையையும் நாட்டின் நிலைமையையும் சீர்படுத்திக் கொள்ளவேண்டியது தமிழ் மக்களின் கடமையாகும்

திரு. டட்லி சேனநாயகாவினது விரிந்த மனப்பான்மையும் நல்லமனமும் அவரது சிறந்த குணாதிசயங்களாகும்.

பார்லிமெண்ட் திறக்கப்பட்டபொழுது அவர் ஆற்றிய உரை இலங்கையின் பார்லிமெண்ட் சரித்திரத்திலேயே தலைவர்கள் நிகழ்த்திய சிறந்த உரைகளில் ஒன்றெனலாம். அவரது உரையில் தேசிய ஐக்கியத்தையும் சௌஜன்யத்தையும் ஏற்படுத்தும் நோக்கமே தொனித்தது. இவரது பேச்சுப் பற்றிக் கருத்துத் தெரிவித்த தமிழர்களின் நண்பரும், பிரிட்டிஷ் பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி பயின்றவருமான ஒருவர் இங்கிலாந்தில்கூட இவ்வளவு தரமான பேச்சு மிகவும் அரிதென்றே கூறினார்.

திரு. டட்லி சேனநாயக்கா எம். பி.யாகவும் விவசாய மந்திரியாகவுமிருந்த பொழுது ஆற்றிய சேவை பற்றிப் பலரும் அறிவர். இவரது தந்தையின் சேவைகளையும் எல்லோரும் அறிவர். இவையெல்லாம் இலங்கையின் சரித்திரத்தில் ஒரு பகுதியாகும்.

திரு. சேனநாயக்காவின் தனித் தன்மையையும் திறமையையும் தமிழ்மக்கள் நன்குணர்ந்து இலங்கைக்கும் தங்களுக்கும் நன்மை தரத்தக்க விதத்தில் பிரதமர் விஜயத்தை வெற்றிகரமாக்குவதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யவேண்டும். இது குறிப்பாக யாழ்ப்பாணத்தமிழ்மக்களின் முக்கிய கடமையாகும்.

நாட்டின் முன்னேற்றத்துக்கும், பொதுநலனுக்கும் திரு. டட்லி சேனநாயக்காவின் விஜயம் வழிவகுக்குமென்பது நம்பிக்கை. மக்களும் தலைவர்களும் எவ்விதமாக வரவேற்பளிக்கிறார்கள் என்பதிலேயே இது பொறுத்திருக்கிறது. எமது மக்களின் பெருநம்பிக்கையைப் பெற்றிருப்பவர் திரு. டட்லி சேனநாயக்காவாகும்.

உயர்ந்த தேசாபிமானியும், ராஜதந்திரியும், தமிழ் மக்களின் ஒரு சிறந்த நண்பருமான ஒருவருக்கு நாம் மகத்தான வரவேற்பு ஒன்றை அளிப்பதைத் தவிர வேறெதைச் செய்யமுடியும்?

## ஈராக் பிரதமர் ராஜினாமா

பாக்தாத், ஆக. 7

சென்ற ஆண்டு செப்டம்பர் மாதம் பதவிக்கு வந்த ஈராக் பிரதமர் அப்துல்ரஹ்மான் அல்பஸாஸ் ராஜினாமாச் செய்துவிட்டார். ராஜினாமாவை ஏற்ற அதிபர் அரீப், முன்னாள் மந்திரி நகீப்தாலியை புதிய மந்திரி சபை அமைக்குமாறு கேட்டிருக்கிறார்.

முத்திரைகள்,
முதல் நாள் கவர்கள்,
அல்பங்களுக்கு
ஏ. சு. எஸ்.
பிலரலிக் சேவிஸ்
"ஒக்சன் கோணர்"
6, மெயின் வீதி,
யாழ்ப்பாணம்.

நாட்டின் பிரதமரே
வருக!
உங்கள் வரவு
நல்வரவாகுக!
★
சிறந்த முறையில்
உத்தரவாதத்துடன்
உங்கள்
டயர்களை
புதுப்பிப்பதற்கு
சிறந்த இடம்
நோர்தேண்
இன்டஸ்றீஸ்
8/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7158


ஐக்கியத்தை உருவாக்கும் எங்கள் பிரதமரே
உங்கள் வரவு நல்வரவாகுக!
கொழும்பு ஸ்ருடியோ
(யாழ். நகரின் ஒரே 'புளக் மேக்கர்ஸ்')
ஸ்ரான்லி வீதி, — — யாழ்ப்பாணம்.

வாழ்க்கையில் சுகசீவியாக விளங்க தினமும்
★ கோபால் பல்பொடி ★
பாவியுங்கள்




பல்வலி, பல்அரணை, இரத்தம் வடிதல்
முதலியவைகளை நீக்கி பற்களுக்கு வெண்மையையும் பலத்தையும் தருகிறது.
அநேக வருடங்களாக இலங்கையில் எல்லாச் சமுதாய மக்களாலும் போற்றப்பட்டு, பாவிக்கப்பட்டு இன்றும் ஒவ்வொரு வீடுகளிலும் உறுதியுடன் விளங்குகிறது.
கோபால் பற்பொடி
எஸ். பி. எஸ். ஜெயம் அன் கோ.
வேல் கெமிக்கல் ஒர்க்ஸ், மதுரை.

இலங்கை சோல் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ்:
எம். ஏ. ஆர். எஸ். மனுவேல் நாடார் அன் கோ,
ஹெட் ஆபீஸ்:- 193, காலிரோடு, கொள்ளுப்பிட்டி,
கொழும்பு — 3
கிளை:- 84, செட்டியார் தெரு, கொழும்பு — 11
தந்தி: Jayajeevi, Colombo. — — போன்: 6019 & 6084




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடமின்மை காரணமாக
'கதம்பமாலை'
இவ்வாரம் இடம்பெறவில்லை

## எல்லோருக்கும் . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி வலியுறுத்துகிறது. இராமநாதன் இந்துப் பல்கலைக் கழகத்தை நிறுவுவதற்கு பரமேஸ்வராக் கல்லூரியினதும் இராமநாதன் கல்லூரியினதும் கட்டடங்களை ஒன்றுக்கி இதுகுறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குப்படியும் தேசிய அரசாங்கத்தை காங்கிரஸ்கட்சி கோருகிறது.

**மொழிக் கொள்கை**

முன்னருள்ள அரசாங்கத்தின் மொழிக்கொள்கைகளினுல் சேவையிலிருந்தும் பலவந்தமாக ஒய்வு பெற்று வெளியேறிய அரசாங்கஊழியர்களுக்கு மீண்டும் வேலை வசதி அளிக்கப்பட்டு அவர்கள் முன்னர் இருந்த நிலைக்குக்கொண்டுவரப்படவேண்டுமென்றுப் காங்கிரஸ்கட்சி கோருகிறது.

இத்திட்டம் அமுல் செய்யப்படாத பட்சத்தில், அதாவது மொழிக்கொள்கையினுல் ஒய்வுபெற்ற அரசாங்க ஊழியர்களுக்கு மீண்டும் வேலை வசதி அளிக்காவிட்டால் அவர்களுக்குநஷ்டஈடு வழங்க வேண்டுமெனவும் காங்கிரஸ்கட்சி கோருகிறது.

## காலியில் பிரதமருக்கு வரவேற்பு

காலி, சனி

தேசிய அரசாங்கத்தின் பிரதம மந்திரியாகப் பதவியேற்றபின் உத்தியோகரீதியில் முதல் தடவையாக நாளை ஞாயிற்றுக்கிழமை காலிக்கு விஜயம் செய்யும் திரு. டட்லி சேனநாயகாவுக்கு காலி மாநகரசபை ஒரு பொதுவரவேற்பளிக்கும்.

உயிரோவியமான
போட்டோக்களுக்கு
செல்லம்ஸ்
யாழ்ப்பாணம்

## 'பேர்லின் சுவர்' கொண்டாட்டம்

கிழக்கு பேர்லின், ஆக. 8

கிழக்கு மேற்கு ஜெர்மனிகளுக்கிடையே கட்டியெழுப்பப்பட்ட 'பேர்லின் சுவரி'ன் 5வது வருட பூர்த்தி விழாவொன்றைக் கொண்டாடுமுகமாக, ஆகஸ்ட் 13ந் தேதியன்று எல்லாக் கிழக்கு பேர்லின் மக்களையும் கலந்துகொள்ளுமாறு கிழக்கு பேர்லின் தனது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. சுவர் கட்டப்பட்ட பின் இதுதான் முதற் தடவையாக கிழக்கு பேர்லின் கம்யூனிஸ்டுகள் அதையிட்டுப் பகிரங்கவிழா நடாத்துகின்றனர்.

## 22 பேர் விடுதலை

லேகோஸ், ஆக. 8

நைஜீரிய புதிய ஆட்சியினர் மேலும் 22 அரசியல் கைதிகளை விடுதலைசெய்தனர். இதுவரை மொத்தம் 44 பேர் விடுவிக்கப்பட்டிருக்கிருர்கள.

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தார். முருகன் மீது அவருக்குள்ள பக்தியை அன்றுதான் கண்டேன் அவரது மாளிகையிலே பூசையறையில், முருகன், நடராஜா, முதலிய பல விக்கிரகங்களும் இருப்பதாக ஓர் அன்பர் தெரிவித்தார். தெய்வ அருள் பெற்ற பிரதமரும், அவரது அரசும் நீடூழி வாழ்க!

ஃ ஃ ஃ

நெற்றிக்கண் உடையானை
நீறேருந் திருமேனிக்,
குற்றமில் குணத்
தானைக் கோணுதார்
மனத்தானைப்,
பற்றிப்பாம் பரை
யார்த்தபடிறன் தன்
பனங்காட்டூர்ப்.
பெற்றெொன்றேறு
பிரானைப் பேசாதார்
பேச்சென்னே.

—ஸ்ரீசுந்தர மூர்த்தி சுவாமிகள்.




## கொழும்பு

செவ்வாய் 9-8-66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை. 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-15 சித்திர கானம், 1-00 சதம்ப இசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 இசைமெட்டு.

இரவு 6-15 கிராம சஞ்சிகை, 6-45 கோட்டு வாத்தியம், 7-15 உரைச்சித்திரம், 7-30 பஞ்சபாணம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 நாதசுரம், 10-00 நேயர் விருப்பம்.

## பாடசாலைக்கு ரேடியோ கிடைக்கும்

### உதவி வித்தியாதிபதி உறுதி

ஊர்காவற்றுறை, திங்.

நெடுந்திவுக்கு அண்மையில் விஜயம்செய்த கொழும்பு உதவி வித்தியாதிபதி திரு. ஏ. வர்ண சூரியாவுக்கும் அவரது மனைவியாருக்கும் நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாசாலை ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் வரவேற்பளிக்கப்பட்டது தலைமை ஆசிரியர் திரு. இ. வேலுப்பிள்ளை வரவேற்புரை நிகழ்த்திஞர். திரு வர்ணசூரியா தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்குப் பதிலளித்துப் பேசுகையில் பாடசாலை ஆசிரியர்களின் உற்சாகத்தையும் பாடசாலையின் வளர்ச்சியையும் அறிந்து தாம் மகிழ்ச்சி அடைவதாகவும் இப் பாடசாலை மாணவருக்குக் கூடிய விரைவில் ஒரு வானொலிப் பெட்டியை வழங்க தாம் ஆவனசெய்வதாகவும் தெரிவித்தார்.

## கிளே

லண்டன், ஆக. 8

பிரயான் லண்டனை வெற்றிகொண்ட உலக அதிபார குத்துச்சண்டை சாம்பியன் காஷியஸ் கிளே இன்று நியூயோர்க் புறப்பட்டார்.

ஐக்கியஅராபியக் குடியரசுக்கு விஜயம்செய்யுமாறு இஸ்லாமிய கலாசார உயர் சபை அவருக்கு அழைப்பு அனுப்பியுள்ளது.

வருகிற செட்டம்பர் 10-ம் திகதி ஜெர்மனியிலுள்ள பிராங் பர்ட்டில் அடுத்த சண்டைக்கு அவர் செல்லுமுன், ஓய்வெடுத்துக் கொள்ள கிளே உத்தேசித்திருக்கிருர்.

## இன்னமும் நடக்கிறது!

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணத்திலிருந்து இலங்கை வானொலியில் காலியான ஒரு வேலைக்கு ஆங்கிலத்தில் விண்ணப்பஞ் செய்திருந்த ஒருவருக்கு நேர்முகப் பரீட்சைக்கு வரும்படி வந்திருந்த கடிதம் தனிச்சிங்களத்திலிருந்ததாக அறியப்படுகிறது கடிதம் மட்டுமல்ல கடிதஉறையிலும் தனிச் சிங்களத்திலேயே விலாசம் எழுதப்பட்டிருந்ததாம்.

இந்த உத்தியோகபூர்வமான கடிதம் எத்தனையோ வகைமாறித்தான் விலாசதாரருக்குக் கிடைத்ததாகவும் தெரிகிறது.

## சன சமூக நிலைய சமாஜத்தின் அறிவிப்பு

சுழிபுரம், திங்கள்

யாழ்ப்பாண மாவட்ட சன சமூக நிலையங்களின் சமாஜத்தினர் தமது அங்க நிலையங்களுக்கு அனுப்பி வைத்துள்ள சுற்று நிருபத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடன் பம்பாய் வெங்காயம், உருளைக்கிழங்கு உற்பத்தியில் போட்டியொன்றை நடத்தி பரிசு வழங்கவிருப்பதாக அறிவித்தல் செய்துள்ளது.

வானொலி நிகழ்ச்சிக்கு நாட்டுப்பாடல்கள் அனுப்பி வைக்குமாறும் தரத்துக்கு ஏற்றவாறு வானொலி கிராம சஞ்சிகையில் ஒலிபரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றும் அந்த நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>இ. போ. ச.</u>

## பஸ், லொறி மோதல்

வல்வெட்டித்துறை, திங்.

நேற்று நண்பகல் 12-30 மணியளவில் இ. போ. ச. வைச் சேர்ந்த பஸ் ஒன்று பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றுகொண்டிருக்கையில் யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறையை நோக்கி வந்துகொண்டிருந்த இ. போ. ச. லொறியுடன் வல்லை வெளியில் மோதுண்டதால் பிரயாணிகள் உட்பட 16 பேர் காயமுற்றனர்.

காயமுற்றவர்கள் பருத்தித்துறை அரசினர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டனர். பலியந்தலையைச் சேர்ந்த லொறி கிளீனர் ஒருவரின் நிலைமை மோசமாக இருந்ததால் பருத்தித்துறை ஆஸ்பத்திரியிலிருந்து யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு அவர் உடன் அனுப்பிவைக்கப்பட்டார்.

சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு வல்வெட்டித்துறைப் பொலிஸார் விரைந்துசென்று விசாரணை நடத்தினர். பஸ் சாரதியான திரு. கே. நல்லதம்பி, கண்டக்டர் திரு. சிவலிங்கம் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

## மாதகலில் வீடமைப்புத் திட்டம்

### எஸ். ஜே. வி. கோரிக்கை

சுழிபுரம், திங்கள்

மாதகல் பகுதியில் வீடமைப்புத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்குமாறு தமிழரசுக் கட்சித் தலைவரும் காங்கேசன்துறை எம். பி. யுமான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் வீடமைப்பு அமைச்சர் ஜனுப் முகமதுவைக் கேட்டுள்ளார். இப் பகுதியில் வீடு வசதியின்றி எத்தனையோ மக்கள் வாழ்வதாக திரு. எஸ். ஜே. வி. சுட்டிக்காட்டியுள்ளார்.

## ஸ்ரீமதி சாஸ்திரிக்கு ரூ. 2 1/2 லட்சம்

பம்பாய், ஆக 7

காலஞ்சென்ற இந்தியப் பிரதமரின் மனைவி ஸ்ரீமதி லலிதா சாஸ்திரியிடம் நேற்று இங்கு 2,50 000 ரூபா வழங்கப்பட்டது. இந்த நிதி "லால்பகதூர் சாஸ்திரி சேவாநிகேதன்" அமைக்க உபயோகிக்கப்படும்.

சோம்பலா! உறக்கமா!! மந்தகுணமா!!!
ஒவ்வொரு கட்டத்திலும், ஒவ்வொரு வேளையிலும் உங்களுக்கு இன்பம் நல்கி உற்சாகமளிப்பது
786 கல்கி பீடி
786 கல்கி பீடி ஈடு இணையற்றது. கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு பரந்த நோக்கமும் அனுபவமும் உடைய உற்பத்தியாளர்களால் தயாரிக்கப்படுவது.
உயர்ந்த ரகப் புகையிலை கொண்டு அழகான கையடக்கமாக கட்டுகளில், காரம், மணம், குணம் இவற்றைச் சீராக சேர்மானப்படுத்தி, உங்கள் ஆனந்தத்திற்கு என்றே உற்பத்தி செய்யப்படுவது.
786 கல்கி பீடிகள்
தயாரிப்பாளர்களும் விநியோகஸ்தர்களும்:
சி. சின்னத்துரை அன் பிரதர்
44, 3-ம் குறுக்குத் தெரு, கொழும்பு.
தொழிற்சாலை: 79 & 79/1, மெசெஞ்சர் வீதி, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வளமிக்க வவுனியாவில்...

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒற்றுமை ஆட்சி அமைய வேண்டும் இந்த ஒருஆட்சியிலுல்தான் இலங்கை வாழ் தமிழ்பேசும் இனம் பருத்தித்துறையில் இருந்தாலென்ன தெய்வந்துறைக் கரையோரத்தில் வாழ்ந்தாலென்ன சகலஉரிமைகளுடனும் வாழ முடியும்.

## இடதுசாரிகள் வந்தனர்

வடக்கு கிழக்கு மாகாணத்தில் இத்தனை காலமும் இடதுசாரிகளின் கொள்கைகளை ஆதரித்துவந்த எண்ணற்ற வாலிபத்தோழர்கள் அக்கட்சியிலிருந்து பிரிந்து எமது கட்சியில் சேர்ந்து ஒத்துழைக்க வந்துள்ளனரென்றல் நமது கட்சியின் வளர்ச்சியைப் பற்றியோ' அதன் நல்லஇலட்சியங்களைப் பற்றியோ கூறவேண்டியதில்லை.

## இளைஞர்களுக்கு அழைப்பு

இளைஞர்களெல்லாரும் அரசாங்க சேவையை இனிமேலும்நம்பியிருப்பது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் நஷ்டத்தை உண்டுபண்ணக்கூடியதாக இருக்கும்.

15,000 சதுரமைல் நிலப் பரப்புக்கொண்ட வவனியா தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினன்என்றவகையில், திரும்பும் எத்திசையிலும் எண்ணற்ற நீர்ப்பாசனத் திட்டங்கள்கொண்ட எனது தொகுதிக்கு ஆயிரக்கணக்கான படித்த தமிழ் வாலிபர்களே! வாருங்கள்! வந்து குடியேறுங்கள் என்று அழைக்கின்றேன்.

## தலைவர் ஜி. ஜி. சாதித்தது என்ன?

நமது தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் சாதித்தது என்ன என்று சொல்லிவைக்க விரும்புகிறேன். காங்கேசன்துறையில் ஒரு சிமெந்து தொழிற்சாலை, பரந்தனில் ஒரு ரசாயனத் தொழிற்சாலை, வாழைச்சேனையில் ஒரு கடதாசித் தொழிற்சாலை— இவைகளெல்லாம் இங்கு நிறுவப் படுவதற்குக் காரணம் யார்? திரு. பொன்னம்பலம்தான் என்பதை யாராலும் மறுக்க முடியுமா?

## கேவலம் வேண்டாம்!

தமிழினத்துக்கு வெட்கத்தையும்,கேவலத்தையும் ஏற்படுத்தக்கூடிய வேலைகளை மட்டும் செய்யாதீர்கள்! வாலிபர்களுக்கு ஏமாற்றத்தைத் தரக்கூடிய வேலைகளை எம் கட்சி வாலிபர்கள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## எதிர்காலம் வாலிபர் கையில்

பாரிஸ்டர் எம். சிவானந்தன் பேசுகையில், தமிழ்க் காங்கிரஸ் கட்சி இந்நாட்டில் வளர்ந்து செல்வாக்கைப் பெறவேண்டுமானல், அது துடிக்கும் வாலிபர்கள் கையில்தானிருக்கிறதென்றும்,கட்சியின் வளர்ச்சிக்காக தன்னலமற்ற சேவைசெய்யவேண்டுமென்றும் கூறினர்.

திரு. கு. ராதாரமணன் பேசியபின், திரு. கு. மோதிலால்நேரு பேசுகையில் தமிழன் இந்நாட்டில் தலைநிமிர்ந்துவாழவேண்டுமென்ருல், சிங்களவர்கள் போன்று நமது மொழியும் தரணியிலே சிறப்புற வாழ வேண்டுமென்று கூறினர்.

திருகோணமலை வாலிப முன்னணியைச்சேர்ந்த திருமூர்த்தி பேசுகையில், அண்மையில் ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன திருமலைக்கு வந்தபோது தமிழரசு எம். பி அவரை வரவேற்கவில்லை என்றும், ஆனல் பிரதமர் யாழ்ப்பாணம் வரும்போது அவரைவரவேற்கப்போட்டி போடுகிருர்கள் என்றும் சொன்னர்.

மற்றும் பலரும் பேசினர்.

## உடுப்பிட்டி கி. ச. கூட்டம்

உடுப்பிட்டி, திங்கள்

உடுப்பிட்டிக் கிராமசபையின் முதலாவது மாதாந்தக் கூட்டம் புதிய தலைவர் திரு ஆர். ஆர். தர்மரத்தினம் தலைமையில் எதிர்வரும் 14-ம் திகதி ஆரம்பமாகும். அன்றையதினம் கிராம அபிவிருத்திக்கான விபரங்கள் மின்சார விநியோகம், வரி விதிப்பு, கிராமசபையின் கணக்கு விபரங்கள் முதலியன பரிசீலிக்கப்படுமெனத் தெரியவருகிறது.

## வானத்திலிருந்து பாக். நட்பு

புதுடில்லி, ஆகஸ்ட் 8

கிழக்குப் பாகிஸ்தானுக்கு 6 நாள் விஜயத்தை மேற்கொண்டு பாகிஸ்தான் அதிபர் அயூப்கான். இந்தியா வழியாகப் பறந்து செல்லுகையில், ஜனதிபதி ராதாகிருஷ்ணன், பிரதமர் இந்திரா ஆகியோருக்கு நட்புச் செய்திகள் அனுப்பினர்.

# பகல் 11 மணிக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள், உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் பிரமுகர்களுக்கும் அரசாங்க அதிபர் அழைப்பு அனுப்பியுள்ளார்.

ரயில்நிலையத்திலும் மற்றும பிரதமர் செல்லும் இடங்களிலும் அவர்போகும் பாதைகளிலும் பிரதமருக்கு அமோகமான வரவேற்பு அளிப்பதற்கு தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் உற்சாகத்துடன் ஒழுங்குசெய்து வருகின்றனர்.

ரயில் நிலையம் தேசியக் கொடிகளாலும், மகரதோரணங்களினுலும் அலங்கரிக்கப்பட்டுள்ளது வீதிகளிலும் பாதைகளிலும் தமிழ்க் காங்கிரஸின் நால்வர்ணக் கொடிகளும் இடையிடையே தமிழரசுக் கட்சியின் மூவர்ணக் கொடிகளும் காட்சியளித்துக்கொண்டிருக்கின்றன.

## நல்லூரில் ஏற்பாடு

இன்று பிற்பகல் நல்லூர்க் கந்தசாமி கோவிலுக்கு வழிபாடுசெய்வதற்கு பிரதமர் செல்லும்பொழுது பிரதமரை நல்லூர்த் தொகுதி எம். பி.யும் தமிழரசுக்கட்சித் தலைவருமான டாக்டர் இ. மு. வி. நாகநாதன் வரவேற்பார். இந்த வைபவத்தில் தமிழரசுக் கட்சி எம். பிக்களும் செனட்டரும் மற்றையோரும் கலந்துகொள்வர்.

நல்லூர்க்கந்தசாமி கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்தபின் ஸ்ரீ நாகவிகாரைக்குச் சென்று பிரதமர் வழிபாடுசெய்வார்.

பிற்பகல் 4 மணிக்கு நாச்சிமார் கோவிலடியிலிருந்து ஆரம்பமாகும் தமிழ்க்காங்கிரஸ் மகாநாட்டு ஊர்வலத்தில் பிரதமர் கலந்துகொள்வார். அலங்கரிக்கப்பட்ட மோட்டார் இரதத்தில் பிரதமரும் தமிழ்க்காங்கிரஸ் தலைவரும் யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்துக்கு காங்கேசன்துறை வீதி, மின்சார வீதி, ஆஸ்பத்திரி வீதி, காங்கேசன்துறை வீதி வழியாக அழைத்துச் செல்லப்படுவார்கள். கோட்டை மைதானத்தில் தமிழ்க்காங்கிரஸின் இருபத்தோராவது ஆண்டு மகாநாட்டின் இறுதிநிகழ்ச்சியாக நடைபெறும் பொதுக் கூட்டத்தில் பிரதமரும் மற்றும் அமைச்சர்களும் இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். தொண்டமான் ஆகியோரும் சொற்பொழிவாற்றுவார்களென எதிர்பார்க்கப் படுகிறது.

## பெற்ருேர் ஆசிரியர் சங்கம்

சங்கானை, திங்கள்

சித்தன்கேணி தமிழ்க்கலவன் பாடசாலை பெற்ருேர்-ஆசிரியர் சங்கம் சென்ற புதன்கிழமை பிற்பகல் 4-30 மணியளவில் கணேச வித்தியாசாலை மண்டபத்தில் நிறுவப்பெற்றது

அப்போது போஷகராக திரு. மு. க. சுப்பிரமணியமும், தலைவராக திரு. வ. ஈஸ்வரம்பிள்ளையும், செயலாளராக திரு. சி. குமாரசுவாமியும், தனதிகாரியாக திரு. அ. மார்க்கண்டரும் தெரிவு செய்யப்பெற்றனர். பதினெருபேர் கொண்ட ஒரு நிர்வாகசபையும் நிறுவப் பெற்றது.

## புதிய மடம்

உடுப்பிட்டி, திங்கள்

கரணவாய் வடக்கு மூத்த விநாயகர் ஆலயத்தில் புதிய மடமொன்று கட்டுவதற்கான அஸ்திவாரக் கல்லை திரு சு. கணபதிப்பிள்ளை நாட்டினர். மடத்திற்கான கட்டட வேலைகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றன.

# பட்டதாரி மாணவர்களின் அதிக வெளியேற்றம்

## அரசாங்க சேவைக்கு பெரும் போட்டி

கொழும்பு, ஞாயிறு

இலங்கையின் 3 பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறும் பட்டதாரிகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதைத்தொடர்ந்து அரசாங்க சேவைக்கு நியமன பெறும்போட்டி அதிகரித்திருக்கிறது.

அரசாங்கசேவை ஆணைக்குழுவின் நிர்வாக அறிக்கை இது பற்றிக்கூறியுள்ளது.

சமீபவருங்காலத்தில் காலியான ஸ்தானங்கள் நிரப்பப் படவிருக்கின்றன.

இவ்வருஷமாக அரசாங்கம் 73 புதிய திட்டங்களை அங்கீகரித்திருக்கிறது. 43 திட்டங்கள் திருத்தியமைக்கப் பட்டுள்ளன. 44 ராஜினமாக்கள் ஏற்கப்பட்டிருக்கின்றன.

## சச்சரவுகள் வேண்டாம்!

### ஜி. ஜி. யின் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செவ்

"தமிழ் காங்கிரஸ் செய்துள்ள ஒழுங்குகளின்படியே இன்று பிரதமரின் வரவேற்பு நிகழ்ச்சிகள் நடக்கும். நல்லூர் கந்தசுவாமி கோயிலில் முருகன் தரிசனத்தைப்பெறுவதற்கு யாருடைய அனுமதியையும் பெற வேண்டிய அவசியமில்லை ஆனல் யார் வேண்டுமானலும் பிரதமரை மாலைபோட்டு வரவேற்றுக்கொள்ளலாம் ஆனல் நமக்குள்ளிருக்கும் சச்சரவுகளை பிரதமருக்குக்காட்டிவிடாதீர்கள் இதுதான் என் பணிவான வேண்டுகோள்!" என்று யாழ்ப்பாண எம். பி. யும், தமிழ் காங்கிரஸ் தலைவருமான திரு. ஜி ஜி. பொன்னம்பலம் கேட்டுக் கொண்டார்

யாழ். நகர மண்டபத்தில் நேற்றுமாலை நடைபெற்ற தமிழ் காங்கிரஸ் இரண்டாம் நாள் மகாநாட்டின் போதே மேற் கண்டவாறு அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

## மேடையில் செனட்டர்கள்

யாழ்ப்பாணம், செவ்

நேற்றுமாலை யாழ்ப்பாண நகரமண்டபத்தில் தமிழ்க் காங்கிரஸ் மகாநாட்டின் ஒரு நிகழ்ச்சியான தேசிய தொழிற்சங்க சம்மேளனத்தின் மகாநாடு நடந்துகொண்டிருக்கையில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த செனட்டர் இருவர் மேடையில் வந்து அமர்ந்து கூட்ட நிகழ்ச்சிகளை பார்த்துக் கொண்டிருந்தனர் திருவாளர்கள் ரணசிங்கா, வீரசிக்கா ஆகியவர்கள் இந்த இரு செனட்டர்களாவர்.

## பட்டினசபையின் நல்லமுன்மாதிரி

### நீதியரசர் பாராட்டு

சங்கானை, திங்கள்

சிறு சிறு ஒழுங்கைகள் ஏற்படுத்தப்படும பொழுதே யாழ்ப்பாணத்து மக்கள் நீதிமன்றங்களுக்கு வருவதை எனது அனுபவத்தில் கண்டுள்ளேன். அப்படியிருந்தும் மானிப்பாய் மக்கள் புதிய ஒழுங்கைகள் உண்டாக்கியும் சிறு ஒழுங்கைகளை வீதிகளாக்கவும் தமது சொந்த நிலத்தைத் தர்மமாக விட்டுள்ளதைக்கண்டு மகிழ்ச்சியடைகிறேன்' என மானிப்பாய் பட்டின சபை பரிபாலன ஆண்டறிக்கையை வரியிறுப்போருக்கு சமர்ப்பிக்கும் வைபவத்தில் விசேஷ விருந்தினராகக்கலந்துகொண்ட நீதியரசர் திரு. பி. ஸ்ரீஸ்கந்தராசா கூறினர்.

11 உ வியாழன் முதல்

கிங்ஸ்லி - பிளாஸா - நவா

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டுநகர்)

மற்றும் திரைகளில்

சிவாஜி - எஸ். எஸ். ஆர்.,

எம். ஆர் ராதா, பாலையா, முத்துராமன்,

நாகேஷ், தேவிகா, புஷ்பலதா

மற்றும் பலர் நடிக்கும்

பாரதமாதா பிக்சர்ஸ்

பழநி

இசை; விஸ்வநாதன்-ராமமூர்த்தி

திரைக்கதை-டைரக்ஷன் ஏ. பீம்சிங்

மூளைக்கு குளிர்ச்சி
சிங்கம் மார்க் சந்தனுதித் தைலம்

கண்ணுக்குப் பிரகாசம்
சிங்கம் மார்க் சந்தனுதித் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சி
சிங்கம் மார்க் சந்தனுதித் தைலம்

வாசனை பொருந்தியது
சிங்கம் மார்க் சந்தனுதித் தைலம்

மக்கள் வாங்குவது
சிங்கம் மார்க் சந்தனுதித் தைலம்

எங்கும் கிடைப்பது
சிங்கம் மார்க் சந்தனுதித் தைலம்

நீங்களும உபயோகியுங்கள்!

சிங்கம் மார்க் சந்தனுதித் தைலம்

உற்பத்தியாளர்கள்:

பானுமுருஸன்ஸ்

88, செட்டியார் தெரு, — கொழும்பு

யாழ்ப்பாண விநியோகஸ்தர்கள்:

N. M. S. ஹாஜியார் & பிரதர்ஸ் K. K. S. ரோட்.

S. சுப்பிரமணியம் & கோ, மருந்துக்கடை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'அரசியலில் குதிக்க தயாராய் இருங்கள்'

## பெண்களுக்கு மாதர் காங்கிரஸ் தலைவியின் அறைகூவல்

யாழ்பாணம், செவ்

"பெண்களுக்கு அரசியலறிவு இல்லையேல் நாடுமுன்னேறமாட்டாது. எவ்விதத்திலும், எத்தேசத்திலும் சனத்தொகையைக் கணக்கிடின், அரைவாசிக்கு மேல் பெண்மணிகளே. ஆகையால் நாட்டின் முன்னேற்றத்தை மனதில் வைத்து அரசியலில் பங்குபற்றுவதற்குத் தயாராகவேண்டும்.

நேற்று முற்பகல் யாழ். நகரமண்டபத்தில் நடைபெற்ற தமிழ்க் காங்கிரஸ் மாதர் மகாநாட்டிற்குத் தலைமைவகித்துப் பேசிய திருமதி ரி. சங்கரப்பிள்ளை மேற்கண்டவாறு கூறினர்.

மாதர் மகாநாடு ஆரம்பமானபோது, சபையின் இருமருங்கிலும் பலவித வர்ண ஆடைகள் அணிந்த பெண்மணிகள் முறையாக வீற்றுக்கொண்டனர். சிறுமிகளும்பெண்களும்போல் உடை அணிந்து இளந்தமிழ் அணிகளும் வந்திருந்தனர்.

இளம் பெண் மணிகள் தேசியகீதம் இசைத்தனர். திருமதி சுவாமிநாதன் வரவேற்புரை நிகழ்த்தினர்.

திருமதி சங்கரப்பிள்ளை மேலும் பேசுகையில் கூறியதாவது:—

எமதுபாஷைக்குஇலங்கை முழுவதிலும்சமமானபாவிப்புரிமை இருக்கவேண்டும். அரசாங்கம் சிங்களவர் வேறுதமிழர்வேறுஎனவித்தியாசம் பாராட்ட சந்தர்ப்பம் அளிக்கக்கூடாது. சிங்களக்கட்சிகள் தமிழனின் ஒற்றுமையை நாடினால் நாமும் ஒற்றுமைப்பட்டு உழைக்க வேண்டும். பெரும்பான்மை மக்களிடம் நல்லெண்ணத்தை வளர்த்து அந்நல்லெண்ணமூலமாக உரிமைகளைப் பெறவேண்டும். இது வே நமது கட்சியின் அடிப்படை லட்சியங்களாகும்.

வருடாவருடம் மாதர் மகாநாடு நடாத்தவேண்டும். எமது கட்சிக்கும் அரசியல் தலைவர்களுக்கும் ஊக்கமளிக்க வேண்டும்.

எத்தனையோ பெண்களும் ஆண்களும் கல்விகற்றபின் உத்தியோகமின்றித் தவிக்கின்றார்கள். அவர்களுக்குத் தொழில் வாய்ப்புக்கள் அளிக்கப்படவேண்டும்.

நாங்கள் சிறுசிறு தொகையினர் சேர்ந்து சங்கங்கள் உண்டாக்கி அவற்றின் மூலமாக பொருளுற்பத்தியில் ஈடுபடவேண்டும். பொருளாதாரத்தை வளர்க்க வேண்டும். அப்போதுதான் பொருளாதாரச் சுதந்திரம் கிடைக்கும்.

எங்கள் தலைவரின் ஒத்துழைப்புடனும், மாதர்முன்னணியினருடைய உதவியுடனும் தொழிற்சாலைகள் நிறுவும் திட்டத்தை முயற்சி செய்து நிறுவவேண்டும். இவற்றின் காரணமாக எங்கள் மாதர் காங்கிரஸ் நிலைபெற்று நடக்கவேண்டும் என்று நாம் உறுதி செய்வோம்.

மற்றும் பலரும் பேசினர். நடனக்கச்சேரியும் இடம் பெற்றது.

# மூன்று வயதுச் சிறுமி கொலை; ஒருவர் கைது

யாழ்ப்பாணம், செவ்

மூன்றுவயதுள்ள சிறுமியொருத்தி கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக ஆனைக்கோட்டையிலுள்ள கூழாவடியைச்சேர்ந்த தனபாலசிங்கம் என்பவர் சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

செபஸ்தியான் என்பவரின மூன்று வயது மகள் மார்க்கிரட் எனும் சிறுமி நேற்று காங்கேசன்துறையிலுள்ள இச்சிறுமியின் தாயாரது தந்தையின் வீட்டில் இறந்த நிலையில் காணப்பட்டதைத் தொடர்ந்து காங்கேசன்துறைப் பொலிஸார் விசாரணை நடத்தினர். விசாரணையின்போது இச்சிறுமி கொலை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படது.

இது சம்பந்தமாக ஆனைக்கோட்டை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. கே. கார்த்திகேசு விசாரணை நடத்திவருகிருர். சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்ட தனபாலசிங்கம் என்பவர் யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட்திரு. ரி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டதைத் தொடர்ந்துஇவரை ரிமாண்டில் வைக்குமாறு மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

# இன்னமும் பணம் கிடைக்கவில்லை

## கமக்காரக் கவலை

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம் பகுதியிலுள்ள ஏழைக்கமக்காரர்கள் வடலியடைப்பிலுள்ள புகையிலைச் சங்கத்துக்குத் தமது சிகரட் புகையிலையை விற்பனை செய்து இரண்டு மாதங்களுக்கு மேலாகியும் தமக்குரிய பணம் கொடுக்கப்படவில்லை எனக்கவலை கொண்டுள்ளதாக அறியப்படுகிறது

## தமிழரின் கலை

யாழ்ப்பாணம், செவ்

"தமிழ்க்கலை ஒருகாலத்தில் சிறப்புற்று உலக அரங்கிலே தனியிடம்பெற்று விளங்கியது. ஆனல் அந்நியரின் ஆட்சியினல் அது இடைக்காலத்தில் பின்னடைக்க வேண்டிய ஒரு நிலைமையேற்பட்டது. ஆனலும் இப்போது மீண்டும் நம் இளைஞர்கள் மத்தியில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது."

நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற தமிழ்க்காங்கிரஸ் மகாநாட்டின் இரவுக் கலைநிகழ்ச்சிகளுக்குத் தலைமைவகித்துப் பேசிய முதலியார் திரு. சி. முத்துத்தம்பி பேசுகையில் மேற்கண்டவாறு சொன்னர்.

மேளக்கச்சேரியுடன் ஆரம்பமான கலைநிகழ்ச்சியில் திரு. வி. கே. ஆறுமுகம் கோஷ்டியினரின் வில்லுப் பாட்டு, செல்வி நவராஜகுலம் வாளரசனின் பாட்டுக்கச்சேரி, 'வெற்றித் திருமகன்' 'பரமபிதாவின் பத்துக் கட்டளைகள்' ஆகிய நாடகங்களும் இடம்பெற்றன.

யாழ்ப்பாணம் திறந்த வெளி அரங்கில் இந்நிகழ்ச்சிகள் நடந்தன.

# வவுனியா எம். பி. மீண்டும் தலைவர்

## காங்கிரஸ் வாலிபமுன்னணி மகாநாட்டில்!

யாழ்ப்பாணம், செவ்.

தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணியின் தலைவராக வவுனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நடைபெற்ற வாலிப முன்னணி மகாநாட்டில் திரு. வி. ஆனந்தசங்கரி செயலாளராகவும், திரு. எஸ். ஸ்ரீதரன் உபதலைவராகவும், திரு. திருநாவுக்கரசு தனாதிகாரியாகவும் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

தொகுதிதோறும் ஒவ்வொரு உபதலைவர் தெரிவு செய்யப்பட்டார்.

## கிரிக்கெட் டெஸ்ட்

# மேற்கிந்தியா இனிங்ஸால் வெற்றி

லீட்ஸ், ஆக. 8

இங்கு நடைபெற்ற நான்காவது கிரிக்கெட் டெஸ்டில் மேற்கிந்தியா இன்னிங்ஸாலும் 55 ஓட்டங்களாலும் இங்கிலாந்தை தோற்கடித்துள்ளது.

## ஸ்கோர் விபரம்

முதல் இன்னிங்ஸ்: மேற்கிந்தியா ஒன்பது விக்கெட்டுகள் நஷ்டத்திற்கு 500 ஓட்டங்கள்.

இங்கிலாந்து 240 ஓட்டங்கள்.

இரண்டாம் இன்னிங்ஸ்: இங்கிலாந்து 205 ஓட்டங்கள்.

இக்கிரிக்கெட் டெஸ்ட் நான்காவது நாளிலேயே முடிவடைந்துவிட்டது. கடைசியும் ஐந்தாவதுமான கிரிக்கெட் டெஸ்ட் இம்மாத இறுதியில் நடைபெறும்.

# வரவேற்பு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லூரி-மத்தியகல்லூரி வீதி, 1-24 1-ம் குறுக்குத் தெரு-பிரதானவீதி, 1-27 இரண்டாம் குறுக்குத் தெரு-பிரதானவீதிச்சந்தி 1-30 3-ம் குறுக்குத்தெரு-பிரதான வீதிச்சந்தி, 4-ம் குறுக்குத்தெரு - பிரதான வீதிச்சந்தி, 5-ம் குறுக்குத் தெரு-பிரதானவீதிச்சந்தி 139 'கொன்வென்ற்,சந்தி 1-42 டேவிட் வீதி - பிரதான வீதிச்சந்தி, 1-45 சென்பற்றிக் வீதி - பிரதான வீதிச சந்தி, 148 கோவில் வீதி-பிரதான வீதிச்சந்தி, 1-51 சென்ற் ஜோன் கல்லூரி, 2-00 பாம் கோட்.

# மந்திரிகள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)


யாழ்நகரின் முக்கியஇடங்களிலும், கடைகள், வீடுகள் பலவற்றிலும் காங்கிரஸ் நான்குவர்ணக் கொடி அசைந்தாடிக்கொண்டிருக்கின்றன. அரசாங்ககட்டடங்களிலும், புதிய பஸ்நிலையத்திலும் சிங்கக்கொடிகள் பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருக்கின்றன.

பிரதமர் ஊர்வலம் வரும் வீதிகளெல்லாம் அழகுக்கோலம் பூண்டுகொண்டிருக்கின்றது. சந்திக்குச் சந்தி சிகரங்களும், அலங்காரப் பந்தல்களும் அழகு காட்டிக்கொண்டிக்கின்றது.

நேற்று நாட்டின் பல பகுதிகளிலுமிருந்தும் 290 விசேஷபொலிசார்யாழ்ப்பாணம்வந்து சேர்ந்தனர். இன்று நள்ளிரவு வரை [illegible]

# தொழிலாளர்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)



நேற்று யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நடைபெற்ற தமிழ்க்காங்கிரஸ் மகாநாட்டின் மாலை நிகழ்ச்சியான தேசிய தொழிசங்க சம்மேளன மகாநாட்டிற்குத் தலைமை வகித்துப் பேசுகையிலேயே சம்மேளனத் தலைவர் திரு. ஜி. ஜி. மேற்கண்டவாறு சொன்னர். 29 சங்கங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் இந்த மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

திரு. பொன்னம்பலம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

தோட்டத் தொழிலாளர்கள் இரு மாத காலமாக நடாத்தி வந்த வேலைநிறுத்தம் அநியாயமானது. அஸீஸ் கட்சி தோட்டத் தொழிலாளர்களை அரசியல் காரணங்களுக்காக பகடைக்காய்களாகப் பாவித்து வருகின்றனர். இப்போது கோரப்படும் ரூபா 17-50 பஞ்சப்படிக் கோரிக்கையை கூட்டரசாங்க காலத்தில் அஸீஸ் கட்சியினர் வற்புறுத்தாதிருந்தே வேலைநிறுத்தத்தின் உண்மை நிலை புரிகிறது".

திரு. என். ரி. சிவஞானம் வரவேற்புரை நிகழ்த்தினர்.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

## தலைமை தாங்க எனக்கென்ன தகுதி?

தொழிற்சங்க சம்மேளனமொன்றுக்குத் தலைமை வகிப்பதற்கு எனக்கு என்ன தகுதியிருக்கிறது என்று கேட்கின்றனர். நியாயமான கேள்விதான்! இதுவரை காலமும் நான் தொழிலாளர்கள் பிரச்னையில் தலையிடாததற்குக் காரணம் என்ன என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அரசியல் வாதிகள் தங்கள் சொந்தச் செல்வாக்குகளுக்காக தொழிலாளர்களை பகடைக்காய்களாக உபயோகித்து வந்தனர். சிங்கள இடதுசாரித்தோழர்கள் 21 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து ஏமாற்றினர், காட்டிக் கொடுத்தனர். இடதுசாரிக்கட்சிகளில் நெடுங்காலமாகப் பணியாற்றி வந்த துடிப்புள்ள இளைஞர்கள் நமது கட்சியில் வந்துசேர்ந்தார்கள். தொழிலாளர்கள் நலனைக் கருதிச் சங்கம் அமைக்கவேண்டும் என்று வற்புறுத்தினர்கள். தலைமை தாங்கும்படி கேட்டார்கள். அதனுல் தான் இப்பொழுது தலைமை தாங்கியுள்ளேன்.

## ஒத்துழைப்பதற்கு காரணமென்ன?

தேசிய அரசாங்கத்துடன் தமிழ்க்காங்கிரஸ் ஒத்துழைப்பதற்குக் காரணங்களைச் சொல்லி வைக்கிறேன்.

தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது நமக்கு ஓரளவு நன்மை தரக்கூடிய கொள்கைகளை உடையதாகத் தெரிகிறது. அதனுல் ஒத்துழைப்பைக் கொடுத்தோம். ஆனலும் எமக்கு உரிமை எல்லாம் கிடைத்துவிட்டது என்று கூறுவதில் அர்த்தமில்லை. இருட்டில் வாழ்ந்த நமக்கு இப்போது சொற்ப வெளிச்சம் கிடைத்துள்ளது. பயமில்லாமல் மூச்சு விட சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

## உரிமை கிடைத்துவிட்டதா?

உரிமைகள் கிடைக்கும் என்ற நம்பிக்கையிலேயே ஆதரித்துக்கொண்டு வருகிறோம்.'

சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் சங்கத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் உரை நிகழ்த்தினர்.

தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

# "வளமிக்க வவனியாவில் வந்து குடியேறுங்கள்!'

## வாலிபர்களுக்கு வவனியா எம். பி. அழைப்பு

— நமது நிருபர் ஈ.கே. ராஜகோபால் —

யாழ்ப்பாணம், செவ்.

"அரசாங்கசேவையைநம்பியிருப்பதில் அர்த்தமில்லை என்பதைகாலவேகத்துடன் போட்டிபோட முடியாமல் பல்கிப்பெருகிவரும் படித்த வாலிபர்களின் வேலையில்லாத்திண்டாட்டப் பிரச்னை உணர்த்திவிட்டது. படித்த வாலிபர்களின் வருங்கால வாழ்வு வளம்பெற்று ஒளி பெற வேண்டுமானல் அவர்கள் விவசாயத்தில் ஈடுபட வேண்டும். அவர்களுக்குக் கை கொடுத்து தூக்கிவிட 15000 சதுர மைல் கொண்ட வவனியாத் தொகுதி தயாராக இருக்கின்றது!" என்றுதமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணித் தலைவரும், வவனியா எம்.பியுமான திரு தா. சிவசிதம்பரம் கூறினர்.



தமிழ்காங்கிரஸ் மகாநாட்டின் இரண்டாம்நாள் நிகழ்ச்சியாக நேற்றுக் காலை வாலிபமுன்னணி மகாநாடு நடந்தது. அப்போது மகாநாட்டுக்குத் தலைமைவகித்த திரு. தா. சிவசிதம்பரம் பேசுகையிலேயே மேற்கண்டவாறு சொன்னர். யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் நடைபெற்ற இம்மகாநாட்டில் திரு. சிவசிதம்பரம் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

## அரசாங்கத்திடம் வற்புறுத்தியுள்ளது

ஆயிரக்கணக்கான படித்த வாலிபர்களுக்கு, உத்தியோகவாய்ப்பு, இனமத பாகுபாடற்ற முறையில் வழங்கப்படவேண்டுமென்று எமது கட்சியின் வாலிப முன்னணி அரசாங்கத்திடம் வற்புறுத்தியுள்ளது. இதற்கு அரசாங்கம் ஆவன செய்ய இணங்கியுள்ளது.

## ஒற்றை ஆட்சிதான் உகந்தது

சிறுபான்மை, பெரும்பான்மை இனங்கள் வாழும் எமது நாட்டில் சிங்கள-தமிழ் பேசும் மக்கள் மத்தியில் தூய்மையான ஒற்றுமை உருவாகி, இந்நாட்டின் தனி

(13-ம் பக்கம் பார்க்க)

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி மேல வீதி. 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஆகஸ்ட்மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org